முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

மலர் 3 | 10-8-56 | வெள்ளி | ஒலி 18

ஆ. எம். சுப்பிரமணியன்



அன்புள்ள
பொன்முடி!

"அடிப்பியோ நொப்பன் மவனே சிங்கண்டா!" — இப்படி வீரக்குரல் கிளம்பும்; குரல் கிளப்பியவரின் கன்னத்திலே இரண்டு அடிகள் விழும். அடிகளை வாங்கிக் கொண்டே, "அடிப்பியோ நொப்பன் மவனே சிங்கண்டா!" என்று ஒப்பாரி வைப்பார் வீரம் பேசியவர்.

இப்படி யொரு காட்சி 'சகுந்தலா' திரைப்படத்திலே வரும். வீரம் பேசுகிறவராக துரைராஜும், கை நீட்டுபவராகக் கலைவாணரும் காட்சி யளிப்பார்கள். அந்த நகைச் சுவைக்காட்சியை மெய்ப்பித்துக் கொண்டு வருகிறார் நாடாளும் நமது அமைச்சர்.

"தெருவுக்குத் தெரு நின்று எம்மீது குறை கூறுகிறீர்களே; தேசத்துரோகிகளே! தி. மு. கழகத்தாரே! தேர்தலுக்கு நின்று எம்மை எதிர்ப்பது தானே! அதற்கு வலுவில்லாமல் வாய்ச் சவடால் எதற்கு?" —காமராசரின் சென்ற ஆண்டுச் சொற்பொழிவுகளிலே சிந்தியது இது!

"தேர்தலில் போட்டியிடத்தான் போகிறோம்" என்று நாம், திருச்சியில் முடிவெடுத்த பிறகு "தேர்தலில் நிற்கிறார்களாமே; முன் யோசனையற்றவர்கள்! மூக்குடைபடப் போகிறார்கள்!" என்ற விதத்திலே அவரது பேச்சு மாறியிருக்கிறது. "பணமில்லை; பலமில்லை; அதனால் இவர்களுக்கு ஜெயமுமில்லை!"—இதெல்லாம் காமராசர்தான்! வார்த்தைகள் தான் வேறே தவிர "அடிப்பியோ நொப்பன் மவனே!" என்ற மெட்டுத்தான்!

படத்திலே துரைராஜ்! நாட்டிலே காமராஜ்! அவரது பல நாளைய தேர்தல் பிரச்சாரத்திற்கும், எச்சரிக்கும் பாணியில் நிகழ்த்தும் பயமுறுத்தல் காலட்சேபத்திற்கும் பதிலிறுத்திடும் வகையிலே அண்ணாவின் கோகலே மண்டபப் பேச்சு அமைந்திருக்கிறது. இலட்சங்கள் தேவையில்லை எமக்கு. இலட்சியமே மூலதனம் என்ற அந்தத் திருவாசகத்திலே அடங்கியிருக்கும் கருத்தாழத்தைக் காமராசர் போன்றவர்களால் உணர முடியாதுதான். தேர்தலில் நிற்பதற்குப் பணம் தேவைதான், இல்லை யென்று கூறவில்லை. ஆனால் பணத்தை மட்டுமே நம்பி யிருப்பது— பணம் வெல்லும் என்ற துணிவு கொள்ளுவது — எவ்வளவு ஆபத்தான பள்ளம் என்பதை சாதாரண அரசியல் அறிவு கொண்டவர்களும் நன்கு உணருவார்கள். கொள்கையை மக்கள் மன்றத்திலே வைத்து வெற்றி பெற்ற நீதிக் கட்சியினர் காலப் போக்கில் காசு பலத்தை மட்டுமே நம்பி விட்ட நேரத்திலேதான் காங்கிரஸ்காரர்கள் வாகை சூடிட முடிந்தது என்பதை மறந்திடலாகாது. அந்த வாகை சூடிகள் இன்று வணங்கிக் கிடப்பதும் "பண தேவி"யைத்தான்! வரலாறு திரும்பும் — இன்றே இல்லாவிட்டாலும், நாளை— நாளை மறுநாள் நிச்சயமாகத் திரும்பும் என்ற உண்மையைத் தான் நாம் அவர்களுக்கு நினை வூட்ட முடியும். காங்கிரஸ் பிரமுகர்களுக்கு பணம் குவிகிறது. காங்கிரஸ் மாளிகை பணத்தால் அஸ்திவார மிடப்பட்டு, தங்கச் சுவர்கள், சொர்ணத்தூண்கள், வைர உத்திரங்கள், கெம்புக்கதவுகள், கோமேதகக் கூடங்கள் என்ற அளவில் புதிதாகக் கட்டப்பட்டு வான் முட்ட வளர்ந்து நிற்கிறது; அறிகிறோம். அதையை பிறக்கவில்லை நமக்கு—அலட்சியம் தோன்றுகிறது. அண்ணா அடிக்கடி சுட்டிக் காட்டுவாரே; அந்த அலட்சியம் பிறக்கிறது! அச்சம் நம்மை அணுகிட அஞ்சுகிறது.

காரணம் என்ன? கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டுகின்றனர் கோமான்கள்—கோமளபுரிச் சீமான்கள்! ஆயிரங்கோடி தான் ஆகட்டுமே - அதனால் என்ன! ஆயிரம் பேர்தான் தந்தனர் என்ற புள்ளி விபரமல்லவா நமக்குக் கிடைக்கிறது! நாம், ஒரு லட்ச ரூபாய் திரட்ட ஐந்துலட்சம் பேரிடம் செல்ல வேண்டும். ஐந்து லட்சம் பேர், அரை-கால்-என்ற விதத்திலே; ஆனால் எள்ளத்தனையும் ஆர்வம் தேயாது அளித்திடுகின்றனர் அந்த ஒரு லட்ச ரூபாயை! ஆயிரங்கோடி அங்கே— ஆனால் ஆயிரம் பேர்! ஒரு லட்சம்தான் இங்கே— ஆனால் ஐந்து லட்சம் பேர்!

இந்தக் கணக்குத்தான் காங்கிரஸ் மாளிகையைக் கண்டு நாம் கலங்காதிருக்கும் துணிவை நமக்கு வழங்குகிறது.

இதோ, கோகலே மண்டபத்தில், நமது தேர்தல் நிதிக்காக ஆயிரம் வெண்பொற்காசுகளை அளித்திருக்கிறார்கள் அண்ணாவிடம்!

அளித்தவர்கள் யார்? அரும்பு மீசை இளைஞர்கள்— அருமை மிகு மாணவர்கள்— வாழ்ந்து கெட்ட திராவிடத்தை வாழ்விக்க வந்த வலிமை மிகு படைவரிசை! உரிமைக் குரல் எழுப்பக் கல்லூரிகளில், கலாசாலைகளில் உதயமாகும் இளஞ் சூரியன்கள்! இருட் கதவைப் பிளந்தெறியும் செங்கதிர்ச் செல்வங்கள்! நெடுஞ்செழியன் அன்பழகன், மதியழகன், இளம் வழுதி, வில்லாளன், அரங்கண்ணல் என்றெழுந்த அரிமாக்கூட்டம் அதோடு நின்று விடவில்லை என அறிவித்துப் புது முகங்காட்டி, புரட்சிக் குரல் எழுப்பி, விடுதலைக்கு வரிந்து கட்டும் பீடு நடைச் சிங்கக் குட்டிகள்! அவர்கள் தந்த தொகைதான் தோழனே ஆயிரம்! அந்த ஆயிரங் கொண்ட பண முடிப்பின் பின்னே மறைந்து கிடப்பது என்ன?

சிபார்சா? கண்ட்ராக்டா? கருப்புச் சந்தையா? கள்ள மொந்தையா? பட்டமா? பதவியா? விருந்தா? வேலை உயர்வா?

அல்ல! அல்ல!! இலட்சிய உணர்வு! கொள்கைப் பற்று! விடுதலை ஆவேசம்—சுதந்திர அனல்—அந்த ஆயிரத்தின் பின்னணியிலே யிருப்பவை இவைகள் தான்!

இப்படிப் பல ஆயிரங்கள், சிறுதுளி பெரு வெள்ளமாய் மாறி—லட்சத்தை எட்டிப் பிடித்துத் தேர்தல் செலவுகளை நடத்த வேண்டியவர்களாயிருக்கிறோம், நாம்! அதுதான் முறையுங்கூட; ஒரு மக்கள் இயக்கத்திற்கு இருந்து தீர வேண்டிய சிறப்புங்கூட—என்பதை உணர்ந்து கடமையாற்றியவர்கள் நாம்!

பளபளப்பு — பகட்டு— இவைகள் ஒரு விடுதலை இயக்கத்திற்குத் தேவையானவை

✲ தொடர்ச்சி 12-ம் பக்கம்

★ மு. கருணாநிதி ★

ஏன் வேண்டும், இன்பத் திராவிடம்?

கேள்வி :

இந்த ஆண்டு பட்ஜெட்டில் இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவு **204** கோடி ரூபாய். ஆனால் ஆந்திரா, சென்னை, மைசூர் திரு – கொச்சி ஆகிய மாநிலங்களின் மொத்த வருமானமே நூற்றி இருபத்தி ஏழரை கோடி ரூபாய்தான். இந்த நிலைமையில் திராவிடநாடு எப்படித் தனித்து இயங்க முடியும்? பாதுகாப்புச் செலவிற்குக்கூட அதன் வருமானம் கட்டி வராதே!

புரிகிறது தோழரே, உமது கேள்வியின் நோக்கம். வருமானமே நூற்றி இருபத்தேழரை கோடி ரூபாயானால், அது பாதுகாப்புச் செலவுக்குக் கூட போதாதே என்று கேட்கிறீர். இது பல பிரச்னைகளை உள்ளடக்கிய கேள்வியாகும்.

(1) முதலாவதாக, திராவிட நாட்டின் வருமானம் என்ன என்பது தெளிவாக வேண்டும். (2) அடுத்து, இப்போதுள்ள டில்லி மத்திய அரசாங்கத்துக்கு இத்தனை கோடி ரூபாய்களை பாதுகாப்புக்காகச் செலவிடும் திராணி எப்படி வந்தது என்பது விளக்கப்பட வேண்டும். (3) கடைசியாக, திராவிடநாட்டிற்கென்று எவ்வளவு பாதுகாப்புச் செலவு தேவை என்பது கவனிக்கப்பட வேண்டும்.

திராவிடத்தின் வருமானம்

நாளை வரப்போகும் சுதந்திர திராவிடத்தின் வருமானம் இப்போதுள்ள ஆந்திரா, மைசூர், சென்னை, திரு—கொச்சி ஆகிய மாநிலங்களின் மொத்த வருமானமாகத்தான் இருக்க வேண்டுமென்பது கண நேர ஆராய்ச்சிக்கு முன்னே நிற்க முடியாத போலி வாதமாகும்.

இனிவரும் திராவிடத்தின் ஆட்சியாளர்கள் எல்லைக்கு அப்பாலிருக்கும் வடநாட்டார்களல்ல; "நமக்கு நாமே" ஆண்டு கொள்ளப் போகிறோம்.

அப்போது நெய்வேலிச் சுரங்கத்தைத் தோண்டி முடித்து கருப்புத் தங்கத்தை வெட்டிக் குவிப்பதில் இப்போதுள்ளதைப் போல தாமதம் செய்வோமா? நிச்சயமாகச் செய்ய மாட்டோம். மின்னல் வேகத்தில் வேலைகள் துவங்கும். மூலைக்கு மூலை சாத்தியப்பட்ட இடங்களிலெல்லாம் ஆலைகள் தோன்றி டெல்லி ஏகாதிபத்ய வாதிகளால் பாலையாகிவிட்ட திருவிடத்தைப் பல்வளம் கொழிக்கும் சீமையாக்கும். அப்போது நமக்கு இந்தக் குறைந்த வருமானமா கிடைக்கும்? நிச்சயம் அதிகமாகவே பெறுவோம்—அதனால் நாட்டு நன்மைக்கு அதிகமாகவே செலவிடுவோம்!

அடுத்து — இப்போதிருக்கிற ஆந்திரா, மைசூர், சென்னை, திரு—கொச்சி—ஆகிய மாநிலங்களின் கூட்டு மொத்த வருமானம் ஏன் நூற்று இருபத்தி ஏழரை கோடியாகவே இருக்கிறது? கேள்வி கேட்ட தோழரே! இந்தக் கேள்வியை ஒரு முறை கேட்டுப் பதில் சொல்லிப் பார்ப்போம்.

மத்ய அரசாங்கத்தின் வருமானம்

ஏன் வேண்டும் திராவிடம்?-இது குறித்து எழுப்பப்படும் சந்தேகங்களுக்கெல்லாம் விளக்கம் தரும், இந்தப் பகுதி!

அரசியல் சட்டப்படி இப்போதுள்ள மாநில அரசாங்கங்களுக்கு குறைந்த வருமானம் தரும் வரிகளை விதிக்கவே உரிமை தரப்பட்டிருக்கின்றன. புராணத்து உவமையைக் கூற வேண்டுமானால் காமதேனுவைப் போன்ற வருமானவரி, கலால்வரி, சுங்கவரி, மரணவரி போன்ற முக்கிய வரிவகைகளை மத்ய அரசாங்கம் விதித்து, கோடி கோடியாக இங்கிருக்கும் செல்வங்களைச் சுரண்டிக் கொண்டு போகிறது. இந்தக் 'காமதேனுவரி'களிலிருந்து மத்ய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்குத் தரும் பங்குத் தொகையோ பரமாணுவை விடச் சிறியது.

மேலும் இங்கு ஓடுகின்ற ரயில்களின் மூலம் கிடைக்கிற தொகை டெல்லிக்குத்தான் போய்ச் சேருகிறது. தபால் தந்தி இலாக்காவின் வருமானத் தொகையையும் அவர்களே எடுத்துக் கொள்கிறார்கள். நாணயங்களையும், கரன்சி நோட்டுகளையும் அச்சிட்டு வெளியிடுகிறார்களல்லவா; அதில் கிடைக்கும் லாபத் தொகைக்கும் மத்ய அரசாங்கம்தான் உரிமையாளராக இருக்கிறது.

கதையொன்று சொல்லுவார்கள்; முழு மூடன் ஒருவனும் நரித்தன்மை கொண்ட நயவஞ்சகன் ஒருவனும் கூட்டுச் சேர்ந்து பயிர் செய்தார்களாம்—ஒரு தோட்டத்திலே கருணைக் கிழங்கு! மற்றொரு பகுதியிலே செந்நெல்!

கருணைக் கிழங்கு அரை ஆள் உயரத்திற்குப் பச்சைப் பசேலென்று தழைத்து வளர்ந்திருந்தது. குள்ள மனம் படைத்தவன் குழந்தை மனம் கொண்டவனைப் பார்த்துக் கூறினானும்— "அன்பா! நீ மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறாய். வியர்வை நீரைச் சிந்தி பயிரிட்டிருக்கிறாய். எனவே இந்தக் கருணைக் கிழங்கு தோட்டத்திலே நீ பூமிக்கு மேலேயிருப்பதையெல்லாம் எடுத்துக் கொள். நான்தான் சோம்பேறியாயிற்றே; எனக்கு பூமிக்கு அடியிலிருப்பதே போதும்!"— என்று!

அந்த மூடனும் நண்பனின் பெருந்தன்மையைக் கண்டு வியந்து, கருணைக் கிழங்குத் தோட்டத்தில் பூமிக்கு மேலேயிருக்கும் தண்டையும், இலையையும் வெட்டிச் சென்றான். பூமிக்கு அடியிலிருப்பது தனக்கு வேண்டுமென்றானே; அந்த வஞ்சகனுக்குப் பொதி பொதியாய்க் கிழங்கு கிடைத்தது!

பாவம்; ஏமாந்தான் அந்த முட்டாள்! இலையும் தண்டும் பயன்படாது—என்று தெரிந்ததும் அவனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அவனிடம் சென்று, 'ஏடா; மூடா! நீ உருப்படுவாயா?' — என்றெல்லாம் திட்டிவிட்டான்.

நரிக் கண்ணன் பார்த்தான்; "அருமை நண்பா! ஆத்திரப்படாதே! நாளைக்கு நெல் வயலில் விளைந்ததைப் பங்கிட்டுக் கொள்ளப் போகிறோம் அல்லவா? அப்போது வேண்டுமானால் நீ நேற்று நான் செய்ததைப் போல் பூமிக்கு அடியில் இருப்பதை எடுத்துக் கொள்; நான் பூமிக்கு மேலேயிருப்பதை எடுத்துக் கொள்கிறேன்!"—என்று சொல்லி கள்ளச் சிரிப்பைத் தவழவிட்டான். மூடனும் அதற்குச் சம்மதித்தான். விளைவு என்ன?

வன்னெஞ்சனுக்கு செந்நெல் கிடைத்தது. வாழத் தெரியாதவனுக்குக் காய்ந்துபோன செந்நெல் பயிரின் வேர்தான் கிடைத்தது.

இதே முறையில்தான் மத்ய அரசாங்கம் மாநிலங்களைப் பொறுத்தவரையில் வரிகளைப் பங்கிட்டிருக்கிறது. கதையின் படிச் சொல்லப்போனால் கருணைக் கிழங்குத் தோட்டத்தில் பூமிக்குக் கீழே விளைந்திருப்பதையெல்லாம் டெல்லி சர்க்கார் மாநிலங்களுக்குக் கொடுத்துவிட்டு, செந்நெல் வயற்காட்டில் பூமிக்கு மேலே விளைந்திருப்பதையெல்லாம் டெல்லி பீடம் அறுத்துச் செல்கிறது.

இப்படியெல்லாம் வஞ்சகத்தின் மூலம் வருமானத்தை அள்ளிக் கொட்டிக் கொள்வதால்தான் மத்ய அரசாங்கம் பாதுகாப்புச் செலவு—என்னும் பெயரிலே பல கோடிகளை விரயம் செய்ய முடிகிறது.

நாளை திராவிடம் பிரிந்தால் தென்னகத்து மாநிலங்களிலிருந்து மத்யஅரசாங்கம்சுரண்டிக் கொண்டு போகும் வருமானவரி; கலால்வரி; சுங்கவரி; ரெயில்வே வருமானம்; தபால் தந்தி வருமானம்— போன்றவைகள் இங்கேயே தங்கிவிடும்.

கேரளத்து மிளகோ, வட ஆற்காட்டுத் தோலோ டெல்லிக்குச் செல்ல வேண்டுமானால் திராவிடத்து அரசாங்கம் சுங்க வரி வசூலித்துவிடும்!

எனவே சுரண்டல் ஒழிந்தால் முன்பு சுரண்டப்பட்ட செல்வம் அத்தனையும் திராவிடத்தவரின் சுபீட்சத்துக்குச் செலவிடப்படும். பிறகு தென்னகம் ஏமாந்து கிடக்கத் தேவையில்லை. முன்பு போல கருணைச் செடியும், செந்நெல் வேரும் கிடைக்காது—கிழங்கையே வெட்டிச் செல்லலாம் நாம்! உளிபட்டத் தங்கம் போல் ஒளி சிந்தும் செந்நெல் மணிகளையே அறுத்துச் செல்லலாம்!

பலனை அறுத்துச் செல்லும்

✻ 8-ம் பக்கம் பார்க்க

குஷ்டரோகி தரவேண்டாம்!

"நான், கழகத்திற்குப் பணக்காரர்கள் பணம் தருவதை 'குஷ்டரோகி தரும் வெண்ணெய்க்குச் சமானம்' என்று அடிக்கடி கூறி வந்திருக்கிறேன்.

"நான், வெண்ணெய் வேண்டாம் என்று கூறவில்லை; அதனை, 'குஷ்டரோகி தரவேண்டாம்' என்றுதான் கூறுகிறேன்."

சென்னை 10-8-56 வெள்ளி

அந்த உறுதிமொழி!

இலங்கைத் தீவிலே சிங்கள மொழியைத் திணித்துத் தூங்கி வழிந்த தமிழினத்தைச் சிங்கக் கூட்டமாக மாற்றியிருக்கிறது, பண்டாரநாயகாவின் அரசு!

தேன் திசையைப் பார்க்கின்றேம்! எம் சிந்தையெலாம், தோள்களெல்லாம் பூரிக்குதடடா — என புரட்சிக் கவிஞரைப் போல களிப்புக் குரல் எழுப்ப முடியவில்லை இப்போது; துக்கம் தொண்டையை அடைக்கிறது நம் சோதரர் படும் தொல்லைகளை நினைக்கும்போது!

தொன்மை மிக்கது; தூய்மை கொண்டது; பகை மொழியைக் கொட்டும் தேளினப் பண்பு அதற்குக் கிடையாது — இருந்தும் தமிழ் அங்கே இகழப்படுகிறது; நம் தாய் அங்கே அலை மோதிடும் நெஞ்சினளாய், உயர் கலைமேவிடும் உச்சாணிக் கிரீடத்தைக் கலைத்து விட்டு தரையிலே விழுந்த சேல்போலச் சித்தம் சோர்ந்து கிடக்கிருள்.

அவளைக் கவனித்து கவலையைப் போக்குவதற்கு நாதியில்லை.

ஏனம்மா உன் முகம் வாடி யிருக்கிறது, என்று வாஞ்சையைக் குழைத்து வார்த்தைகளைக் கொடுப்பதற்கு ஆட்கள் கிடையாது,

ஆமாம் தோழர்களே; 'ஈழத்துத் தீவில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்கிற கோரிக்கைக்கு சென்னை அரசாங்கம் ஊக்கமளிக்கவில்லை, இது வரைக்கும்! இனியும் அப்படி யொரு ஊக்கம் தரும் உத்தேசமும் சென்னை அரசுக்குக் கிடையாது' — என்பதாக இந்திய உபகண்டத்தின் தூதுவர் இலங்கை அரசனிடம் உறுதிமொழியளித்திருக்கிருராம்!

இந்தச் செய்தியை இலங்கைப் பிரதமர் பண்டார நாயகாவே பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் அறிவித்திருக்கிருர்!

பச்சைத் தமிழர் ஆட்சி புரிகிருர், இந்தப் பைந்தமிழ் மாநிலத்தில்! காமராசராம் அவர் பெயர்! கச்சை கட்டிக் களம் சென்று, கடாரம் போல் பல கொண்ட கன்னித் தமிழினத்தின் பிரதிநிதியாம், பாதுகாவலராம் அவர்! இச்சைகள் கிடையாதாம் அவருக்கு! அய்யோ, பரிதாபமே! சகோதரப் பற்றுகூடவா திசை யெட்டும் புகழ் சேர்த்து வாழ்ந்த இராவணப் பெரியாரின் பரம்பரையினரிடம் காட்டுவதற்கு இல்லாமற் போய் விட்டது அவரிடம்!

பள்ளிச் சிறுவர்களுக்கெல்லாம் இலவசப் பகல் உணவு கிடைக்காவிட்டால் பதவியையும் துறப்பேன் என வாய்ப்பறைசாற்றினாமே முதலமைச்சர் காமராசர்! பள்ளிச் சிறுவர்பால் பரிதாபம் காட்டிய வீராதி வீர விருதுநகரத்துத் தீரர் — அந்த இரக்க உணர்ச்சியில் பத்தில் ஒரு பகுதியைக் கூடவா பழுத்த இலைபோல் இலங்கைத் தருவில் ஊசலாடிக் கொண்டிருக்கும் தாய் மொழியாம் தமிழ் மொழியிடம் காட்ட முடியாமல் போய்விட்டது?

குழந்தைகளுக்கு அன்னமிட்டால் மாட்டுப் பெட்டியிலே ஓட்டுகள் விழும்; இலங்கையில் தமிழை ஆதரித்தால் அப்படி என்ன விழப் போகிறது?—என்று நினைக்கிற அளவுக்குக் கேவலம், தேர்தல் விவகாரங்களால் ஒதுக்கிவைக்கக் கூடிய பிரச்னையாகவா ஆகிவிட்டது புவனம் ஆண்ட தமிழ் மொழி?

இந்தோனேஷியாவிலே விடுதலை முழக்கம் கேட்டது; அதை ஆதரிக்குமுகத்தான் டெல்லியிலே ஆசிய நாடுகளின் மாநாடு கூட்டி டச்சு ஏகாதிபத்யத்திற்குத் தாவா கொடுத்தார், பண்டித நேரு!

ஆப்பிரிக்காவிலே சுதேசிகளாம் கருப்பர்கள் தீயைப் போல், தீயினும் கொடிய தேளைப் போல், பாம்பினைப்போல், தீண்டத்தகாதவர்களாய் பறக்கணிக்கப்பட்டிருந்தார்கள், நிறத் திமிர் பிடித்த வெறித் தன்மையாளர்களால்! அப்போதெல்லாம் ஆதரவுக் குரல் கொடுத்திருக்கிறது டெல்லி! ஐ. நா. வில் கூட அதன் முழக்கம் எதிரொலித்திருக்கிறது!

எங்கேயோ இருக்கும் அல்ஜீரியாவிலே மனித வேட்டையாடுகிருர்கள், பிரெஞ்சு நாட்டுக் காட்டு மிராண்டிகள்! அதற்கு ஐந்து அம்சத் திட்டம் தீட்டுகிருர், தலையை அகில உலக விகாரங்களிலும், மிதித்து நசுக்குவதற்காகப் பாரங்களை உள் நாட்டிலும் வைத்துக்கொண்டிருக்கும் பிரதமராம் பண்டித நேரு!

ஆனுல் அந்தப் பெருந்தன்மையாளரால் இலங்கையில் தமிழினம் அவமானப்படுத்தப்படும் நேரங்களில் வாய் திறந்து ஒரு வார்த்தை பேச முடியவில்லை!

இழிவென ஒன்று உலகத்தின் எந்தப் பக்கத்திலிருந்து எழுந்தாலும், இடியெனக் கர்ஜித்து 'இந்தா பிடி' எனச் சாபமிடும் சர்வோத்தமர் கல்லாலடித்த சிலையாகிவிட்டார், தமிழர்களைப் பொறுத்த வரையில்!

போகட்டும்; அவர் வடநாட்டார்; எனவே அக்கறையில்லையென வைத்துக் கொண்டாலும், பச்சை தமிழனென்று சொல்லிக் கொள்வதற்குப் பிரியப்படும் காமராசர் அரசாங்கமும் சளிமண்ணுக்குச் சமானமாய், நேரு டண்டிதர் பிசைந்தபடியெல்லாம் உருவம் கொள்ளும் தன்மைக்குப் பலியானது ஏன்?

'பண்டார நாயகாவே! இலங்கைத் தமிழரை இஷ்டம்போல் வெட்டித் தள்ளும்; சுட்டுக் கொல்லும்' — என்று மறைமுகமாகத் தூண்டிவிடுவதைப்போல் சென்னை அரசாங்கம் இலங்கை அரசுக்கு உறுதிமொழி அளிக்க முன்வந்தது ஏன்? கூடப்பிறந்தவன் தலையிலே கொள்ளிக் கட்டையைச் சொருக நினைப்பது ஏன்?

காரணம்; இங்குள்ளவர்களை ஆட்டுவிக்கும் கயிறு வடநாட்டு மூலவர்களிடம் இருக்கறது!

இந்த உபகண்டத்தின் சார்பிலே இலங்கைத் தீவிலே வாயசைப்பவர் ஒரு வடநாட்டுக்காரர்! வங்க மாநிலத்தைச் சேர்ந்தவர்!

ஆடுகளின் பாதுகாவலுக்கு ஓனாய்களை அமர்த்தியதைப்போல; தவளைகள்போல் அனுதாரவாய்த் தேம்பி அழும் தமிழர்களுக்கு பாம்பு மனம் படைத்த வடநாட்டுக்காரர் ஒருவர் அமர்த்தப்பட்டிருக்கிருர்!

தமிழன் பட்டமரம்; பொட்டுப் பூச்சி; புன்மைத் தேரை! அவனைப் பற்றிப் பேசுவதற்கே பதவியிலிருப்போர் பயப்படுகின்றனர்.

அய்யோ இலங்கைத் தோழா! கடல் கடந்து சென்றனரே உன் மூதாதையர்; இப்படி உங்களை கண்ணீர்க் கடலில் மிதக்க விடுவதற்குத்தானு?

ஈழம்வென்றனே வேழம் நிகர்த்த ராஜேந்திரன்; இப்படி முகில் காணு மயில்போல உங்களை வாட்டமுறச் செய்வதற்குத்தானு?

என்ன செய்வது; தென்னகம் உங்களுக்கெனப் பரிந்து பேசி குனிந்துகிடக்கும் உங்களைத் தூக்கி நிறுத்துவதற்குச் சக்தியின்றி தேசியச் சகதியிலே அமிழ்ந்து கிடக்கிறது,

அன்றொருநாள் வஞ்சக வீபீஷணனைத் தம்பியாகப் பெற்ற மாபழிக்கு ஆளாகி அவதிப்பட்டான் தமிழர் மூதாதையாம் இராவணன்.

இன்றும் அப்படித்தான். தமிழனென்ற உணர்ச்சி ஒரு சிறிதுமில்லா ஒதிய மரங்களை, விந்தியத்துக்கு அப்பாலிருந்து உத்தரவை எதிர்பார்த்துக் கிடக்கும் வெற்றுக் குடுக்கைகளை நாடாள்வோராய் ஏற்றுக்கொள்ள வேண்டிய இழி நிலையைப் பெற்றிருக்கிறது தாயகம்!

ஆமாம்! கட்டுண்டோர்; பொறுத்திருப்பீர்; காலம் மாறும் என்பதைத்தான் உங்களிடம் திருப்பித் திருப்பிச் சொல்லித் தீரவேண்டியவர்களா யிருக்கிறேம்!

தேர்தல் நிதி!

தேர்தலுக்காக நாம் சேகரிக்க எண்ணியிருப்பதெல்லாம் சில இலட்ச ரூபாய்கள்தான்.

நமது கழகத்தில் உள்ள எழுத்தாளர் பலரும் கதைகளோ, அல்லது கட்டுரைகளோ எழுதித் தருவார்கள்; ஒவ்வொருவருடைய எழுத்தும் புத்தகமாக வெளியிடப்படும். இந்த வெளியீட்டிற்காகக் கிடைக்கும் தொகை, கழகத்தின் தேர்தல் நிதியில் சேரும்.

நமது கழகத் தோழர்களில் சினிமாவிற்குக் கதை எழுதுவோர் இருக்கின்றனர்; அப்படி எழுதுகிற ஒவ்வொருவரும் ஒரு சினிமாவில் தங்களுக்குக் கிடைக்கும் தொகையை தேர்தல் நிதிக்குத் தருவார்கள்.

அதேபோல, நமது கழகத்தில் சிறந்த நடிகர்கள் இருக்கின்றனர்; எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஆர். இராமசாமி, டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். இராசேந்திரன் போன்றோர் தாங்கள் நடித்துக்கொண்டிருக்கும் படங்கள் ஒன்றில் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பணத்தைத் தேர்தல் நிதிக்கெனத் தருவார்கள்.

இவை எல்லாம் எனது ஆசைகள் அல்ல; செய்து முடிக்கப்பட்ட ஏற்பாடுகள்.

—அறிஞர் அண்ணு [சென்னைக் கூட்டத்தில்.]

○○செங்கரும்பினும் இனிய செந்தமிழ்ச் சொற்களால் பாமாலை கட்டுகிறாள்; சிந்தை குளிரப் பண்ணமைத்துப் பாடுகிறாள். செவிக்கு உணவூட்டும் அந்த அன்னை சந்தம் கெடாது பாட்டிசைக்க எங்கு கற்றாள்? எவ்வாறு புனைந்தாள்? ..அன்பே உருவானவள் தாய்; அவளது உள்ளமோ ஒரு கவிதைச் சுரங்கம்! அள்ள அள்ளக் குறையாத அந்தக் காவியக் குவியலில் சில துளிகள்......

தாயின் தாலாட்டு

'கண்ணே கமலப்பூ!
  கண்ணிரண்டும் தாமரைப்பூ!
கண்மணியே ஏலம்பூ!
  காதிரண்டும் பிச்சிப்பூ!
மேனி மகிழம்பூ!
  மேற்புருவம் சண்பகப்பூ!'

மாலைப் பொழுதில் நறு மஞ்சள் அரைத்துக் குளித்து, மேலை மினுக்கிட்டு. விரித்திருந்து சூலாகி, பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த அருமைக் குழந்தையை இப்படித் தாலாட்டுகிறாள் தாய்.

இந்தத் தாலாட்டுப் பாடலில் தோய்ந்திருக்கும் இனிமையும் நயமும் எழுத்தில் அடங்குமா; சொல்லத்தான் முடியுமா?

செங்கரும்பின் இனிமையைக் காட்டிலும் சுவை மிகுந்த செந்தமிழ்ச் சொற்களைப் பாங்குறக் கோர்த்துப் பாமாலையாக்கித் தாலாட்ட அந்த அன்னை யாப்பிலக்கணம் கற்கவில்லை; அணியிலக்கணம் பயிலவில்லை—ஏன், பாடசாலைக்கே சென்றிருக்க மாட்டாள் என்றுங் கூறலாம். அவ்வாறிருக்க, நாவினிக்கும் இந்தத் தாலாட்டுப் பாடலை எவ்வாறு புனைந்தாள், எங்கிருந்து கற்றாள் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அதற்கு மறுமொழி இதுதான்.

அன்பே உருவானவள் தாய். அவள் நெஞ்சம் ஒரு கவிதைச் சுரங்கம். அங்கே அள்ள அள்ளக் குறையாமல் கவிதைச் செல்வம் விளைந்துகொண்டேயிருக்கிறது.

தன் அன்புக் கனியின் ஒவ்வோர் அங்கத்தையும் மிருதுவான மென் மலர்களுடன் உவமித்துப் பாடும் அவள் மேலும் சொல்வதைப் பார்ப்போம்:

'முத்தே பவளமே!
  முக்கனியே சர்க்கரையே!
கொத்து மருக்கொழுந்தே!
  கோமளமே கண்வளராய்!'

அன்பின் பெருக்கிலே பொங்கியெழும் சொல் அலைகள் எளிதில் ஓயக்கூடியதல்லவே. இன்னும் பாடுகிறாள்:

'பத்துக் கடல் நீந்திப்
  பறித்து வந்த தாமரைப்பூ!'

பத்து மாதங்கள் சுமந்திருந்ததைப் பத்துக் கடல் என்று அழகாகக் குறிப்பிடுகிறாள்!

பத்து மாதக் கனியென்று பாடுவதோடு அவள் மனம் நிறைவு பெற்றுவிடவில்லை. விலை மதிக்கவொண்ணா அந்த மாணிக்கத்தை ஈன்றெடுக்க அவள் அனுபவித்த துன்பமும் மனக் கவலையும் அவளுக்குத் தானே தெரியும்?

'வாடிய நாளெல்லாம்
  வருந்தித் தவமிருந்து
தேடிய நாள் தன்னில்
  செல்வமாய் வந்த கண்ணே!
மலடி மலடியென்று
  வையகத்தார் ஏசாமல்
மலடியென்ற சொல்லை
  மாற்றப் பிறந்தாயோ!'

உலகத்தில் ஒரு நாளைக்கு எத்தனையோ ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. அவற்றில் தன் மகனும் ஒருவன் என்று அவள் சாதாரணமாக எண்ணவில்லை. எப்படி எண்ணுவாள்? காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா? ஆகவே,

'ஆயிரம் முத்திலே-என் கண்ணே நீ
  ஆராய்ந் தெடுத்த முத்தோ!'

என்று தன் குழந்தையைப் புகழின் சிகரத்திற்கே கொண்டு செல்கிறாள்!

தாயுள்ளத்தில் ஊறிடும் கனிவு தோய்ந்த இனிய குரலிலே, சுளை சுளையான அருஞ்சொற்களைக் கலந்து குழந்தைக்குச் செவியுணவாக ஊட்டுகிறாள் அவள். ஆனால் அந்தச் சின்னஞ் சிறு கிளியோ இன்னும் தூங்காமல் அடம் பிடிக்கிறான்! ஏன் தூங்க மறுக்கிறான்? தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த அவனை அப்படியே தூக்கித் தொட்டிலில் போட்டாளா? இல்லை; வேறென்ன செய்தாள்?

'தூங்காத கண்ணுக்குத்
  துரும்புகொண்டு மையெழுதி
உறங்காத கண்ணுக்கு
  ஓலை கொண்டு மையெழுதிக்
கண்ணுக்கே மையெழுதிக்
  கணகவரப் பொட்டு மிட்டு...'

இவ்வளவு அலங்காரங்களையும் ஆசையோடும் அக்கறையோடும் செய்த பிறகுதான் ஆடும் தூளியில் — அசையும் ஊஞ்சலில் படுக்கப் போட்டாளாம்! அந்த ஊஞ்சலென்ன சாதாரணமானதா?

'சதுரகிரி மலையேறிச்
  சாதிலிங்கக் கட்டை வெட்டி
ஈழத்துக் கப்பலிலே
  ஏற்றி வரும் தேக்கு மரம்
ஏழு தச்சன் ஆசாரி
  இழைப்பு இழைக்கும் கம்மாளர்
சேர்த்துப் பணிப்படுத்திச்
  சித்திரத்தால் ஒப்பமிட்டு,

செய்த தொட்டில் அல்லவா அது! மாணிக்கமும் ரத்தினமும் வைத்திழைத்த தொட்டிலில் தூங்காமல் கிடக்கும் பாலகனைப் பார்க்கிறாள். அவன் கண்களில் கண்ணீர் வழிந்திருக்கிறது. அவள் மனது பதைக்கிறது.

'ஏனழுதான் என்னரியான்
  ஏலம்பூ வாய்நோக?'

என்று பரபரப்புடன் கேட்கிறாள்.

'நாடெல்லாம் தூங்க
  நடுக்கழனி நெல் தூங்கப்
பாலில் பழம் தூங்கப்
  பாதி நிலாத் தான்தூங்க...'

நீ மட்டும் ஏன் கண்ணே தூங்காமல் அழுகிறாய்?— என்று விசாரிக்கிறாள்.

அடித்தவர்களைச் சொன்னால் ஆக்கினைகள் செய்வாளாம் அந்த மாதா.

எப்படிப்பட்ட ஆக்கினைகள் தெரியுமா?

'வெண்ணெயால் விலங்கு பண்ணி
  வெய்யிலிலே போட்டு வைப்
                போம்!
மண்ணால் விலங்கு பண்ணித்
  தண்ணீரில் போட்டு வைப்
                போம்!'

அடேயப்பா! எவ்வளவு பெரிய தண்டனை! ஆமாம்; பூச்செண்டால் பிள்ளையை அடித்த அத்தைக்கும் மாமனுக்கும் இதைவிடக் கடுமையான தண்டனை என்ன இருக்கிறது?

கெஞ்சியும் கொஞ்சியும் கேட்டும், அடித்தவர் யாரென்று குழந்தை சொல்லவில்லை. வேறு எதனால்தான் அழுதான்? அழுதானே இல்லையோ என்று அவளுக்குச் சந்தேகம் வந்து விட்டது. மீண்டும் குழந்தையின் பால்வடியும் முகத்தைப் பார்க்கிறாள். சந்தேகமில்லை; அவன் கன்னத்தில் கண்ணீர் வழிந்த அடையாளம் நன்றாகத் தெரிகிறது. வெகு நேரமாக அழுதிருப்பானோ என்று ஒரு நினைப்பும் எழுகிறது அவள் உள்ளத்தில். அப்போது ஒரு கற்பனை உதிக்கிறது. அந்தக் கற்பனைத் திரையில் அவள் காணும் காட்சிகள் எத்தகையன என்று பார்ப்போம்!

'தம்பி அழுத கண்ணீர்,
  ஆறாகப் பெருகி
ஆனை குளித்தேறி
  குளமாகத் தேங்கி
குதிரை குளித்தேறி
  வாய்க்காலாய் ஓடி
வழிப்போக்கர் வாய்கழுவி
  இஞ்சிக்குப் பாய்ந்து
எலுமிச்சை வேரோடி
  மஞ்சளுக்குப் பாய்ந்து
மருதோன்றி வேரோடி
  தாழைக்குப் பாய்கையிலே
தளும்பியதாம் கண்ணீரும்
  வாழைக்குப் பாய்கையிலே
வற்றியதாம் கண்ணீரும்!'

'கண்ணீர் ஆறாய்ப் பெருகுகிறதே' என்பது உலக வழக்கு. குழந்தையினிடம் ஒரு தாயுள்ளம் காணும் கண்ணீர் பெரிதாக அல்லவா பெருகிப் பாய்கிறது!

தன் பட்டுக் குழந்தை இவ்வளவு கண்ணீர் பெருக்கியதற்குரிய காரணத்தை பலவிதமாகக் கேட்டுப்பார்த்தும் பதில் கிடைக்கவில்லை. மறுபடியுமோர் ஐயம் பிறக்கிறது அவளுக்கு. மாமன்மார்மீது ஏதும் வருத்தம் கொண்டு அழுதிருப்பானோ? அவ்வாறு நினைக்க, தன் அன்பு மகனின் மாமன்மார்-தனது சகோதரர்கள்—ஒன்றும் அறியாதவர்களல்லவே! சகோதரிமீதும் சகோதரியின் மகன்மீதும் அன்பு இல்லாதவர்களல்லவே!

'கண்ணான தம்பிக்குக்
  காது குத்தப் போறோமென்று
பொன்னான மாமனுக்குக்
  கடுதாசி போட்டவுடன்.
கொத்து விடா நெத்தும்
  கோதுபடா மாங்கனியும்
பருவப் பலாச்சுளையும்
  பக்குவத்து மாங்கனியும்...

சீர்வரிசைகளாகக் கொண்டு ஓடோடி வந்த மாமன்மார் மேல் மன வருத்தம் கொள்ளக் காரணமில்லையே!

அப்படியானால் தன் கண்ணான கண்ணன் ஒரு காரணமுமில்லாமலா அழுதான்? வெகு நேரம் சிந்தித்தாள். அப்பாடா, கடைசியில் காரணத்தையும் கண்டுபிடித்தாள்! என்ன காரணம்? இதோ கேளுங்கள்:

'ஆரும் அடிக்கவில்லை
  ஐ விரலும் தீண்டவில்லை!
தானா அழுகின்றான்
  தம்பி துணை வேணுமென்று'

தனக்கொரு தம்பியைப் பெற்றுத் தரச்சொல்லி தன் தயாரிடம் கேட்டு அழுதானும் அந்தப் பொல்லாத பயல்! 'விரைவில் பெற்றுத் தருவேனடா, அன்பே!' என்று அந்தத் தாய் வாய்விட்டுச் சொல்லி, தாலாட்டைத் தொடருகிறாள்:

'ஆராரோ ஆரிவரோ
  ஆரிவரோ ஆராரோ!
உன்னுறக்கம் நீ கொள்ள
  உத்தமியாள் தாலாட்ட
பொற் கொடியாள் தாலாட்ட
  புத்திரனே நித்திரை செய்!

இதற்கு மேலும் அந்தச் செல்ல மகன் கண்ணுறங்காமலிருப்பானா? அவன் அமைதியாகக் கண் வளரட்டும்! ஆனால் இங்கு நம்மையறியாமலேயே நமது நெஞ்சினுள் ஓர் ஏக்கம் சூழ்கிறதல்லவா? ஆம்—நம் அருமைத் தாய் இப்படி அழகுத் தமிழில் தாலாட்ட, அதைச் செவிமடுத்து இன்புற்றவாறே தொட்டிலில் மெய்மறந்து தூங்கிச் சுகம்பெற, நாம் இன்று குழந்தைகளாக இல்லையே!

—வள்ளிமணாளன்

('தமிழ் முரசு,' சிங்கை. 1...7—56)

''நாம் தேர்தலில் நிற்பது, நம்மில் சிலருக்குச் சட்டசபையில் இடம் வேண்டும் என்பதற்காக அல்ல; நம்மிலே சிலருக்கு சட்டசபையில் இடம் வேண்டும் என்பதுதான் நமது நோக்கம் என்றால். காமராசர் தருவதற்குத் தயாராகவே இருக்கிறார்; விருது நகர் நகரசபைத் தேர்தலில் தரவும் சம்மதித்தார்.

''நாம் கூறுவது நம்மிலே சிலருக்கல்ல இடம்; நமது கழகத்திற்கு சட்டசபையில் இடம் வேண்டும் என்கிறோம்—50 பேரோ, 40 பேரோ—அது பற்றிக் கவலையில்லை; நமது கழகம் சட்டசபையில் இடம் பெற்றிருக்கவேண்டும்.''

—அறிஞர் அண்ணா (சென்னை, 5—8—56)

சாதுவும் நேருவும்!

சென்ற வாரம் இந்தியாவின் பிரதமர் பண்டித நேரு சாதுக்களின் தூது கோஷ்டியைத் தனது இல்லத்தில் சந்தித்துப் பேசினாராம். சென்னையிலிருந்து சென்ற என். ஜி. ஓ.க்களின் தூது கோஷ்டியைப் பார்க்க மறுத்தவர் சன்யாசிகளோடு பல நிமிஷ நேரம் வாயுரையாடியிருக்கிறார். அப்போது அவர்கள் என்ன பேசியிருப்பார்கள்—என்பதைக் கற்பனைக் காதுகளால் கேட்டதுதான் இந்தக் கட்டுரை!

சாதுக்கள்: ஜெய் சக்தி!

நேரு: ஜெய் ஹிந்த்!

சாது: பார்த்தீர்களா, நமக்கும் உங்களுக்கும் வணக்கம் சொல்லும் முறைகளில்கூட எவ்வளவு ஒற்றுமை இருக்கிறது? ஜெய் சக்தி; ஜெய் ஹிந்த்—ஏறக்குறைய நீங்கள் அரசியலில் இருக்கிறீர்கள் என்பதைத் தவிர நமக்குள் என்னதான் வித்யாச மிருப்பதாக நினைக்கிறீர்கள்?

நேரு: ஆமாம்; அதிக வித்யாசமில்லைதான்! உங்களில் பலர் அட்சய பாத்திரமென்ற பெயரிலே ஆளுக்கொரு திருவோடு வைத்திருக்கிறீர்கள். நாங்கள் தலைக்கு வைத்திருக்கிறோமே கதர்க் குல்லாய்—அதைத் திருப்பிப் பிடித்துக் கொண்டு ஓட்டு கேட்கப் போகும்போது நாம் இருவரும் ஒன்றாகவே ஆகிவிடுகிறோம்!

சாது: ஆனால் நாங்கள் தினம் தினம் அந்தத் தெருவுக்குப் போய் வருவோம். நீங்களோ ஓட்டுப் பிச்சை வாங்கியவுடன் மறு தேர்தல் வருகிற வரை தொகுதிக்கு வருவதையே மறந்துவிடுவீர்கள்!

நேரு: [அசடு வழிய] ஆமாம்; ஆமாம்! அது கிடக்கட்டும். நீங்கள் இப்படி தூது கோஷ்டியாக வந்ததின் நோக்கம் என்ன?

சாது: ஆண்டிகளுக்கு ஏதய்யா நோக்கம்? ஏதோ வந்தோம்—ஆமாம்; இந்த ஐந்தாண்டுத் திட்டத்துக்கு நாங்கள் பிரச்சாரகர்களாக இருக்கலாமென்று நினைக்கிறோம்!

நேரு: அப்படியானால் உங்கள் தொழில்?

சாது: சே! சே! நீங்கள் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் நாங்கள் எங்கள் தொழிலை விட்டுக் கொடுப்போமா? இந்தத் தொழிலைப் புரிந்து கொண்டே ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் பிரச்சாரம் செய்ய சாத்யக் கூறுகளை ஆராய்ந்து பார்க்க முடிவு செய்திருக்கிறோம்.

நேரு: அது எப்படி முடியும்?

சாது: உதாரணமாக ஒவ்வொரு ஊரிலுள்ள ஆண்டி மடத்தையும் ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சார மடமாக்கலாம். எல்லா சாதுக்களும் இனிக் கதரே கட்ட வேண்டும் என முடிவு செய்யலாம். அம்மா, பசிக்குதே!' — என்பன போன்ற சினிமா மெட்டுகளில் 'திட்டம் வெற்றிதான்!'—எனப் பாட்டிசைக்கலாம்! இன்னும் எவ்வளவோ வேலைகளைச் செய்யலாமே!

நேரு: இதற்குச் சம்பளம் ஏதாவது வேண்டுமா?

சாது: சே; சே! பணத்தை நாங்கள் கைகளாலேயே தொட மாட்டோம். ஆனால் எங்கள் திருவோட்டில் உங்கள் அசோகச் சக்கர சின்னத்தைப் பொறித்து, அவைகளுக்கெல்லாம் ஒரு வெள்ளிப் பூண் போட்டுக் கொடுத்தால் போதும்...

இன்னொரு சாது: இன்னொன்று; மந்திரிகளுக்கெல்லாம் தங்கள் கார்களில் தேசியக் கொடியைப் பறக்கவிட அதிகாரம் இருப்பதைப் போல, எங்களுக்கும் அன்னக் காவடிகளிலெல்லாம் தேசியக் கொடியைப் பறக்க விட்டுச் செல்ல விசேஷ சலுகை வேண்டும். தினம் பீடிச் செலவிற்கு ஆளுக்கு ஓரணா ஊதியம் கொடுத்தால் போதுமானது.

நேரு: இதையெல்லாம் மத்திய அரசாங்கமே தர வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

சாது: சே! சே! அப்படி நினைப்போமா! மத்திய அரசாங்கம் கொடுப்பதானது சொந்த அடுப்பில் சமைப்பதுபோல. நீங்கள் மாநில அரசையே கொடுக்கச் சொல்லுங்கள். அவைகள்தான் உங்களிடம் கெஞ்சிக் கூத்தாடி, பிச்சை வாங்கி வருகின்றன. எப்போதுமே எங்களுக்கு பிச்சையெடுத்து வரும் பொருள்களை உபயோகிப்பதில்தான் பிரியம் அதிகம்!

நேரு: ஆமாம்; இப்படிப் பிரச்சாரம் செய்வதற்கு ஆட்கள் போதுமா?

சாது: என்ன இப்படிச் சொல்லி விட்டீர்கள்? நாங்கள்தான் தினம் ஒரு பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வருகிறோமே?

நேரு: என்ன; பிள்ளை பிடிப்பதா?

சாது: நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? உங்கள் பேரக் குழந்தைகளைத்தான் இந்த ஆதாரக் கல்வியெல்லாம் வேண்டாமென்று இங்கிலாந்தில் படிக்க வைத்திருக்கிறீர்களே! அப்படியே இருந்தாலும் மந்திரி வீட்டுக் குழந்தைகளையா தூக்குவோம்? ஆக அப்படிப் பிடிக்கப்படும் குழந்தைகளையெல்லாம்கூட நாங்கள் ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சாரத்திற்குத் தயார் செய்துவிடுவோம். நீங்கள் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாதீர்கள்.

[உடனே ஒரு சாது எழுந்து, பரங்கி ஓட்டினால் செய்யப்பட்ட தம்பூரை மீட்டி, 'சலாம் பாபு; சலாம் பாபு; திட்டம் வெற்றிதான்!'—என்று பாடுகிறார். விடுமுறைக்காக வீட்டில் தங்கியிருக்கும் அவரது பேரக் குழந்தைகள் வேடிக்கை பார்க்க வருகின்றனர்!]

நேரு: [கை தட்டி] பாமர மக்கள் மனதைக் கவருவதற்கு இப்படியொரு சாதனம் அவசியம்தான்!

சாது: என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? இந்தக் காலத்தில் மந்திரிமார்கள் பேசினால்கூட எங்களுக்குக் கூடுகிற கூட்டம் கூடுவது கிடையாது. அது தவிர, தென்னிந்தியாவில் சில சாதுக்கள் ரெயில்களில் தட்சிணப் பிரதேச ஆதரவுப் பிரச்சாரம் செய்து ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

நேரு: சரி; உங்கள் பிரச்சினையைக் கவனிக்கிறேன். (கூர்ந்து கவனித்துவிட்டு) அடடே! அந்த சாதுவின் பாதங்களை ஏன் துணியால் மூடியிருக்கிறீர்கள்?

சாது: ஓ, அதுவா? நமது ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத் முன்பு பிராமணர்களின் பாதங்களைக் கழுவி நமஸ்காரம் செய்து கொண்டாரல்லவா; அதைப் போலவே நீங்களும் அந்தப் பிராமணருக்குப் பாத பூஜை செய்வீர்களென்று நினைத்து, அழுக்குப்படாமலிருக்க மூடிவைத்திருந்தார். நீங்களோ அப்படிச் செய்யவில்லை.

நேரு: ஆமாம்; தனிப்பட்ட முறையில் நான் சீர்திருத்தவாதிதான். வேறு சமயமாயிருந்தால் நான் ராஜன் பாபுவைக்கூட கண்டித்திருப்பேன். பாவம்; அவருக்கு வயதாகிவிட்டது. மன திருப்திக்கு எதையாவது செய்துவிட்டுப் போகட்டுமே என்று விட்டுவிட்டேன்.

சாது: அப்படியானால் சாதுக்களைப் பற்றி நீங்கள் தாழ்வாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?

நேரு: சே; சே! அப்படியெல்லாம் நினைத்துவிடாதீர்கள். சென்ற மாதம் தென்னாட்டிலிருந்து என். ஜி. ஓ.க்கள் எனக் கூறிக்கொண்டு சில பசங்கள் வந்தார்கள். நான் அவர்களைச் சந்திக்க முடியாதென்று திருப்பியனுப்பி விட்டேன். என்னுடைய காரிய

✽ 10-ம் பக்கம் பார்க்க

28—7—56 அன்று, ஏர்வாடி தி. மு. க. சார்பில் அளித்த வரவேற்பில் தோழர்கள் கருணாநிதி, மதுரை முத்து, அலிசேக் மன்சூர், செயலாளர் மீரான் மற்றும் தி. மு. க. தோழர்கள்!



சென்ற இதழில்....

தாயாரின் வாயிலாகச் சேதி கேள்விப்பட்ட சிந்தாமணி, தனக்குற்ற அவமானத்தைப் போக்கிக் கொள்ள வீட்டை விட்டுப் புறப்படுகிருள். அந்த இரவில்! பாலையூர் மருத்துவ மனையிலிருக்கும் ஆனந்தியிடம் சென்று விபரீதத்திற்கு விளக்கம்பெற வேண்டுமென்பது அவள் நோக்கம். அப்படி அவள் பாலையூரில் ஓடிக் கொண்டிருக்கும் போது, கைது செய்யப்பட்டு போலீஸ் வண்டியில் செல்லும் டைகர், அவளைப் பார்த்து வண்டியிலிருந்து குதித்து மறைகிருன்... பிறகு.

15

போலீசாரால் அவன் மறைந்த திசையைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் போன பக்கத்தை விட்டுவிட்டு வேறு பகுதிகளில் தேட முனைந்தார்கள். அவனே ஒரு சந்திலே நுழைந்து, ஒரு சாக்கடை வாய்க்காலின் உள்ளே புகுந்து வேறு வீதிக்கு வந்து விட்டான். ஓடிக் கொண்டிருக்கிற பெண்ணை சந்திப்பதற்கும், எதிரே மடக்குவதற்கும் அதுதான் சரியான வழியென்று அவன் தீர்மானித்தான். அவன் எதிர்பார்த்தது போலவே அவளும் அவன் எதிரே வந்து விட்டாள், "சிந்தாமணி! நில்!!" என்ற குரல் கேட்டு அவள் திடுக்கிட்டாள்,

தன்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்த பாதகனின் குரல்தான் அது என்பதை உடனே புரிந்து கொண்டாள். ஆவேசம் அவளை ஆட்டிப் படைத்தது. ஆயினும் அப்படியே நின்ருள். 'வரட்டும் அவன் அருகே!' என்ற வீராப்பு அவள் உள்ளத்திலே பொங்கி வழிந்தது. 'என்ன பாடு படுத்துகிறேன் அவனை' என்பது போல அவளது விழிகள் சுழன்றன. டைகர், மெதுவாக அவளருகே நடந்து வந்தான்,

"வாடா வஞ்சகனே! வா! எங்கே வந்தாய்? என் வாழ்வை ஏனடா இப்படி சீரழிய வைத்தாய்?" என்று குமுறிஞள் அவள். "அதெல்லாம் பேச இப்போது நேரமில்லை. ஆபத்து காத்திருக்கிறது, வா... வா...என்னேடு!" என்று அவளைக் கரந்தொட்டுப் பரபரவென்று இழுத்துக் கொண்டே ஓடினுன் அவன். அந்த வேகத்தில் அவன் பின்னே சிறிது ஓடிய சிந்தாமணி, ஆத்திரமனைத்தையும் சேர்த்து அவன் கன்னத்திலே "பளார்!" என்று ஒரு அறை கொடுத்து, "காரணம் சொல். என்னைக் களங்கம் சூழ்ந்தவள் என்று ஏன் கற்பனை செய்து காட்டினுய்? நீ தானே படுபாவி; அந்த அக்கிரமச் செயலுக்கு மூல கர்த்தா!" என்று அலறிஞள். டைகர், அவளைப் பிடித்திருந்த பிடியை விட்டு, தன் கன்னத்தை அழுத்திக் கொண்டான். அதுதான் சமயமென சிந்தாமணி ஓட ஆரம்பித்தாள். டைகர் விடவில்லை, தொடர்ந்தான், ஆனல் அவனுல் அவ்வளவு வேகம் ஓட முடியவில்லை. கன்னம், எண்ணெயிட்ட அப்பளம்போல் வீங்க ஆரம்பித்தது. வலியை சமாளித்துக் கொண்டே ஓடினுன். அவன் கையில் அகப்படுவது சிலந்தி வலையில் சிக்குவது போலாகுமெனக் கருதிய சிந்தாமணி, திசை தெரியாமல் ஓடிக் கொண்டேயிருந்தாள். எதிரே விளக்குகள் தெரிந்தன.

பின்னே திரும்பிப் பார்த்தாள், தூரத்தில் டைகர் வருவது தெரிந்தது. விளக்குகள் தெரிந்த பக்கம் மிக வேகமாக ஓடினுள். அதுதான் பாலையூர் ரயில்வே ஸ்டேஷன். ரயில் நிலையத்தில் வண்டி புறப்படத் தயாராக இருந்தது. மூன்ருவது மணி அடிக்கப் பட்டது. இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு புகை வண்டியின் ஒலி எழுந்தது. சிந்தாமணி, நிலையத்தில் விசாரித்தாள்; எந்தஊர் போகிற ரயில் என்று! பெங்களூர் போகிற வண்டியெனப் பதில் கிடைத்தது. அவள் மனதிலே கண நேரத்தில் பல நினைவுகள் மின்னலென எழுந்தன. "பெங்களூர் மாப்பிள்ளை வீட்டுக்கே போய், அவர்களிடம் தான் நிரபராதியென நிரூபித்தால் என்ன? ஆம் அதுவே சரி!" இந்தத் தீர்மானத்தோடு சிந்தாமணி, புகைவண்டியிடம் ஓடினுள். வண்டியில் ஒரே கூட்டம். திடீரென எந்தப் பெட்டியிலும் ஏற இயலவில்லை. மிகவும் சங்கடப்பட்டு. கடைசியில்பெண்களுக்கென உள்ள தனிப் பெட்டியில் ஏறிக் கொண்டாள். அதில் மட்டும் தான் சிறிது கும்பல் குறைவாக இருந்தது. வண்டி புறப்பட்டது. சிந்தாமணி, வண்டியிலிருந்தவாறே டைகர் வருகிருனு என்று எட்டிப் பார்த்தாள். கண்ணுக் கெட்டிய தூரம் அவளுக்குத் தெரியவில்லை. ஆனல் அவளையுமறியாமல், வண்டி நகரும்போது கடைசிப் பெட்டியில் அவன் ஓடிவந்து தொத்திக் கொண்டான். சிந்தாமணி, பெங்களூருக்குத்தான் போகிருள்; அங்கு போய் தன்னைத் தூய்மையானவள் என்று விளக்குவதற்குத்தான் கிளம்பியிருக்கிருள்; ஆகவே நடுவழியில் அவளை எதுவும் கலகம் செய்யாமல்—பெங்களூர் போனதும் மடக்கிவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

சிந்தாமணி ஏறிய பெட்டியிலேயிருந்த பெண்மணிகள் அனைவருமே அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். ஒருத்தி மட்டுமேஅரைத் தூக்கமாயிருந்தாள். அவளது விழிகள் கூடப் பாதிதான் மூடியிருந்தன. பார்வைக்குப் பெரிய வீட்டுப் பெண் போல இருந்தாலும் முகத்திலே ஆண்மையின் சாயல் அளவுக்கு மீறிக் காணப் பட்டது.

கழுத்திலே இரட்டை வடம் சங்கிலி போட்டிருந்தாள். காதில் வைரத் தோடு—முழங்கை மட்டும் வளையல்கள்!...... பணக்காரியின் தோற்றம். முகத்திலே மட்டும் பெண்மையின் பொலிவில்லை. உதடுகள் தடிப்பேறியிருந்தன அவளுக்கு! கண்கள், சற்று சிவந்திருந்தன. நல்ல சிவப்புச் சேலை கட்டியிருந்தாள். அலங்காரமான காலணி அணிந்திருந்தாள். ரவிக்கையின் கைகள் தோள்பட்டையோடு நின்று விட்டன. சரியான தூக்கமின்றி, அவள் உழன்று கொண்டிருந்தாள்.

பலகணி வழியே அடிக்கடி பார்ப்பதும், பிறகு தான் உட்கார்ந்திருக்கும் பலகையின் கீழே கவனிப்பதும் — சற்று நேரம் கண்களை மூடிக் கொள்வதுமாக சங்கடப்பட்டுக் கொண்டிருந்தாள். சிந்தாமணி, அவளுக்குப் பக்கத்திலே 'உட்கார்ந்து கொண்டாள். பணக்காரி, சிந்தாமணியை உற்று நோக்கினுள். அந்தப் பார்வை சிந்தாமணிக்கு அச்சத்தையும், வெறுப்பையும் உண்டாக்கியது அவள் தூங்குவது போலக் கண்ணை மூடிக் கொண்டிருக்கும்போது, சிந்தாமணி, அவளை நன்ருகக் கவனித்து இன்னும் சிறிது பீதி கொண்டாள். மணமறியாத நீலக் கனகாம்பரப் பூவை தலையிலே வைத்துக் கொண்டு, மிளகாய்ப் பழத்தின் எரிச்சலை வெளியிடும் ஏதோ ஒருவகை வாசனைப் பொருளையும் மேனியில் பூசிக் கொண்டு, அடக்க ஒடுக்கமின்றி அமர்ந்திருக்கும் அந்த 'மாது சிரோன்மணி' சிந்தாமணிக்கு ஒரு புதிராகவே தோன்றினுள். ரயில் எங்காவது ஒரு ஸ்டேஷனில் நிற்கும். உடனே அந்தப் 'புதிர்மனுஷி' எழுந்து கதவுப் பக்கம் நின்று கொள்வாள். வெளியே தலையை நீட்டி யாரையோ எதிர்பார்ப்பதுபோல ஆவலை முகத்தில் தேக்குவாள். பிறகு, வண்டி நகர ஆரம்பித்ததும் தன் இடத்தில் வந்து அமர்ந்து கொள்வாள். விடை காண முடியாத சிக்கலாக உணர்ந்தாள் சிந்தாமணி, அவளை! சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு, சிந்தாமணி, பக்கத்திலேயுள்ள அந்தப் படாடோபக்காரியை மறந்து விட்டாள். இதைவிடப் பெரிய சிக்கலிலேயிருந்து அவள் விடுபட வேண்டுமே! அதை நினைத்தால் அவள் நெஞ்சில் 'ஓமை எண்ணெ'யில் தீப் பற்றுவது போலப் பற்றும்! "விபச்சாரி!" இந்தக் கர்ண கடூரமான வார்த்தைக்கு இலக்காகிவிட்டவள் அவள்! குற்றம் புரியாத எத்தனையோ நிரபராதிகள் தண்டிக்கப்படு

மு. கருணாநிதி

இருர்கள். ஆயுள் தண்டனை—தூக்குமேடை—நாடு கடத்தல்—இப்படியெல்லாம் தீர்ப்பு வழங்கப்படுகிறது அவர்கட்கு! அந்தத் தண்டனைகளையெல்லாம் விட, விபச்சாரப்பட்டத்தை சுமக்கச் சொல்லி, ஒரு தூய உள்ளத்தில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது மிகக் கொடுமை! மிகக் கொடுமை!! அந்தக் கொடுமைக்கு முடிவு காணத்தான், தானே தன் வழக்கிற்கு, வழக்கறிஞளாகவும்—சாட்சியாகவும் செல்கிருள் பெங்களூர் நோக்கி!

ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றது. வழக்கம் போல அந்தக் 'கனகாம்பரம்' கதவண்டை நின்று கவனித்தாள். சிந்தாமணியும், என்ன ஸ்டேஷன் என்று பார்ப்பதற்காக வெளியே தலையை நீட்டினுள். ஸ்டேஷன் பெயர்ப்பலகை தூரத்தில் இருந்ததால் சரியாகத் தெரியவில்லை. ஸ்டேஷன் பக்கம் வட்ட மிட்ட அவளது கண்கள் திடீரென எதையோ பார்த்து அகலத் திறந்தன. அவள் பெட்டியோரமாக ஒரு வயதான அம்மையும் ஒரு வாலிபனும் நின்று கொண்டிருந்தார்கள். வயதானவளை இன்னொருவன் கைபிடித்து அழைத்து, அருகேயுள்ள முதல் வகுப்பு வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தான். அப்போது அந்தப் பக்கம் வந்த ஒரு பெரிய தனவந்தர், "என்ன அழகப்பன்? ஏது இவ்வளவு தூரம்?' என்று கேட்டார். சிந்தாமணியின் மனம் எப்படி அலைமோதியிருக்கும்.

ஆம்; அவன் அழகப்பனே தான்! தன்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்பிவந்து, தனக்கு வேசிப்பட்டம் கட்டிவிட்டுத் திரும்புகிற அழகப்பனேதான்! அவள் அந்த உரையாடலை உன்னிப்பாகக் கவனித்தாள்.

"அம்மாவும் நானும் ஒரு ஊருக்குப் போய்விட்டு பெங்களூர் திரும்பினேம். வழியிலே கார் பழுதாகிவிட்டது. அதனுல் காரை சீர்செய்து எடுத்து வரும்படி டிரைவரை இங்கு விட்டு விட்டு நானும் அம்மாவும் பெங்களூர் போகிருேம்''.

தனவந்தர், நானும் பெங்களூர்தான் வருகிறேன் என்று கூறவே, அழகப்பனும் அவரும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள், டிரைவர் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டான்.

"காரை ஜாக்ரதையாக எடுத்துவா!" என்று அழகப்பன் கூறுவதற்கும் ரயில் அதை விட்டு நகருவதற்கும் சரியாக இருந்தது. சிந்தாமணிக்கு வண்டியில் இருப்புக் கொள்ளவில்லை. இவ்வளவு நேரம், பக்கத்திலேயிருந்தவளின் அட்டகாசத்தையும், அவள் பூசியிருந்த "வாசனை"யின் நெடியையும் சகித்துக்கொண்டு தான் உட்கார்ந்திருந்தாள், இப்போதோ அவள் நெஞ்சம் படபடத்தது. உலகம் நிலைமாறிச் சுழல்வதுபோல் தெரிந்தது. புகை வண்டி, ஆகாயத்தை நோக்கிப் போவது போலவும், தண்டவாளத்தை விட்டிறங்கி பாலத்தில் மோதி சுக்கு நூருகி விட்டது போலவும்—நினைவுகள் தாக்கின. காய்ச்சல் அடிப்பதுபோல உடம்பு சூடேறி விட்டது. கைகால்கள் கட்டுப்படுத்த முடியாமல் நடுங்கின.

தன்னை "அவமானப் படுகுழி" யெனத் தீர்மானித்தவனைத் தேடி, தான் நிரபராதியென வாதிடப் போகிருள். அவனே வழியிலே வந்தது மட்டுமல்ல; பக்கத்து வண்டியிலேயே வந்து கொண்டிருக்கிருன். அடுத்த ஸ்டேஷனில் இறங்கி, அழகப்பனையும் அவன் தாயாரையும் சந்தித்தால் என்ன? கேள்வி அவளைத் துளைத்தது.

சேச்சே! ரயிலில் போய்ப் பேசுகிற பேச்சா இது? அதுவுமில்லாமல் அவர்கூட ஒரு தனவந்தரும் இருக்கிருர். கூடாது! கூடாது! பெங்களூரில் போய்ப் பார்த்துக்கொள்வோம்—ரயிலை விட்டு அவர்கள் இறங்கியதும் அவர்கள் பின்னுலேயே தொடர்ந்து செல்வோம்! இப்படி ஒரு முடிவு செய்து கொண்டு, தனக்குத் தானே திருப்தி அடைந்து கொண்டாள். எப்படியும் தான் களங்கமில்லாதவள் என்று ஆதாரம் தந்து, அழகப்பனைத் தன் துணைவனுக ஏற்றுக் கொண்டு விடமுடியும் என்று அந்த பரிதாபத்திற்குரிய பாவை நம்பினுள். பாவம்; கள்ளங்கபடமற்ற இளம் நெஞ்சம்! உலகத்து மோசடிகளைத் தொட்டுப்பார்க்கவும் விரும்பாத சிட்டுக் குருவி! அவளுக்கு இப்படியொரு வேதனை—வெள்ளிக்கிழமை பொழுது விடிந்தாலும் விடிந்தது; அவளுக்கு விநாச காலமாக முடிந்தது! காலை முதல் அவள் பட்ட கஷ்டங்கள் அப்பப்பா!—இனி மேலாவது; சனிக்கிழமை வருவதற்குள்ளாவது அவளுக்கு ஏதாவது விமோசனம் பிறக்குமா?

பக்கத்துப் பெட்டியிலே கணவனுக வந்திருக்கவேண்டிய கட்டழகன்!

கடைசிப் பெட்டியிலே அவளைக் கசங்கிய மலராக ஆக்கத் துடிக்கும் காதகன்! அவனுக்கோ போலீஸ் பயம்!

இவளுக்கோ, அவன் வந்து விடுவானே என்ற அச்சம்!

ரயில் போய்க் கொண்டேயிருந்தது: பல்வேறு நினைவு கொண்ட பிரயாணிகளைச் சுமந்து கொண்டு!

அடுத்து ஒரு ஸ்டேஷன், ரயில் நின்றது. சிந்தாமணிக்கு அருகேயிருந்தவள் எழுந்து கதவண்டை வந்தாள். நாலைந்து போலீஸ்காரர்கள் திடுதிடுவென அந்தப் பெட்டியில் வந்து ஏறினுர்கள். பெண்கள் வண்டியில் அவர்கள் திடீரென ஏற வேண்டிய காரணம் என்ன? வண்டி சோதனை செய்யப்பட்டது. சிந்தாமணி உட்கார்ந்திருந்த பலகையின் கீழேயிருந்து ஒரு சதுர மரக் கட்டைப் பெட்டியைப் போலீசார் எடுத்தனர் பரிசோதனை நடந்தது.

அந்தப் பெட்டி நிறைய அபின் அடைக்கப்பட்டிருந்தது. "யாருடைய பெட்டி இது?" போலீசார் கேட்டனர். வழியில் உள்ள பல ஸ்டேஷன்களில் நிறையப் பெண்கள் இறங்கிவிட்டனர். இப்போது மிச்சமிருப்பவர்கள் சிந்தாமணி, அந்தப் பணக்காரி, மற்றும் சில பெண்கள்—அவ்வளவு தான்!

பணக்காரி, ஜாடையாக சிந்தாமணியைக் காட்டினுள். போலீசார், சிந்தாமணியை மிரட்டிக் கேட்டனர். அவள், தனக்குத் தெரியாது என்ருள். 'அபின்' என்ருல் என்ன? அதைக் கடத்திக் கொண்டு போய் கள்ளச் சந்தையில் விற்பதும், வெளி நாட்டுக்கு அனுப்புவதும் எப்படி? என்கிற விஷயங்கள் எல்லாம் அந்தக் குற்றமற்ற கோதைக்கு எங்ஙனம் தெரியும்?

ரயிலில் இருந்தவர்களில்; சிந்தாமணியின் தோற்றமே, சந்தேகத்திற்குரிய தோற்றமாகப் போலீசாருக்குத் தெரிந்தது. அதோடு, அந்தப் 'பட்டாடோபக்காரி'யின் குறிப்பு வேறு சேர்ந்தது!

"உன்னைக் கைது செய்திருக்கிருேம்!" என்று சிந்தாமணியைப் பார்த்து போலீசார் சொன்னுர்கள். சிந்தாமணிக்கு, அவள் காதுகளையே நம்ப முடியவில்லை.

(தொடரும்.)

தனிப்பட்ட கடிதங்களுக்கு,

ஆசிரியர் முகவரி,

மு. கருணநிதி.

"அஞ்சுகம்"

7, எ. 4-வது தெரு,

தெற்கு கோபாலபுரம்.

சென்னை-6.

சென்னை நகர மாணவர்களுக்கு!

தி. மு. க. மாணவர் கிளை கூட்டம் ஒன்று சென்னை இராயபுரம், 'அறிவகத்தில்' 17-8-56 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். அதுபோது 5—8—56 அன்று நடைபெற்ற 'தேர்தல் நிதி அளிப்பு விழா' கூட்ட வரவு—செலவு கணக்கு மற்றும் இதர பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும்.

கூட்டத்திற்கு, தி. மு. க. மாணவர் கிளையின் பால் அக்கரை கொண்ட எல்லா மாணவர்களையும் கலந்து கொள்ள வேண்டுகின்றேன்.

சென்னை நகரிலுள்ள கல்லூரி—பள்ளிகளின் பிரதிநிதிகள் சென்னை நகரைச் சார்ந்த கிளைக் கழகங்களின் நிர்வாகிகள், சென்னை நகரிலுள்ள அமைப்புக் குழு உறுப்பினர்கள் ஆகிய எல்லோரையும் இதனையே அழைப்பாகக் கொண்டு பங்கு கொள்ள பணிவுடன் அழைக்கின்றேன்.

அன்பன்,

டி. கே பொன்னுவேலு,

அமைப்பாளன்,

தி. மு. க. மாணவர்கிளை

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நாளது (19—8—56) ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணி அளவில் என் மகன் செல்வன் காங்கயனுக்கும் பேளுக்குறிச்சி மிட்டார்தார் வி. சுப்பராய (கவுண்டர்) அவர்களின் மகள் செல்வி மங்களம்மாளுக்கும் பேளுக்குறிச்சியில் என் இல்லத்தில் அறிஞர் சி. என். அண்ணுதுரை அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கும் திருமண விழாவிற்கு தோழர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

யானும் அவ்வண்ணமே
கோருகிறேன்:
வி. சுப்பராய (கவுண்டர்)
மிட்டாதார், பேளுக்குரிச்சி.

தங்களன்புள்ள,
ஜி. பி. சோமசுந்தரம்
பேளுக்குறிச்சி.

கடலூர் கூட்டம்

மு. கருணநிதி 12—8—56 ல் கலந்து கொள்வதாயிருந்த கடலூர் தி. மு. க. பொதுக்கூட்டம்; தெளிவான முன்னறிவிப்பு இல்லாததாலும்—தஞ்சை மாவட்ட செயற்குழுவில் கலந்து கொள்ளவேண்டிய அவசியத்தாலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரச்சார பலம்!

என்னிடம் ஒரு லாரி—சாமான், தட்டுமுட்டுகள் ஏற்றிக் கொள்வதற்காக! ஒரு 'வான்'—சுமார் 20 பேர் 'மனம் உண்டானால் இடம் உண்டு' என்ற வகையில் பிரயாணம் செய்ய! சென்னையிலிருந்து நானும் என்னோடு 20 வாலிபத் தோழர்களும் தேவையான சாமான்களுடன் புறப்பட்டு சைதாப்பேட்டை அடைவோம்; ஒருநாள் அங்கு காலை முதல் இரவுவரை பிரச்சார வேலைகள் நடைபெறும். ஊரில் ஒரு மரத்தடியில், நாங்கள் கொண்டு செல்லும் படங்களை எல்லாம் விரித்து வைத்துக்கொண்டு மக்களைக் கூட்டிவைத்து விளக்கம் கூறுவோம்; அந்தப் படங்கள், நாட்டின் நிலையை நாட்டு மக்களுக்கு விளக்குவனவாக இருக்கும்.

பின்னர், மாலையில் நான்கைந்து தோழர்கள் பேசுவார்கள்; இரவு தோழர்கள் பலருடன் நானும் சில காட்சிகளை நடிப்பேன்; இப்படி சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையில், மூன்று மாத காலம் சுற்றி வந்தால், நாம் எழுப்புகிற பிரச்சாரச் சூறாவளியை எதிரிகள் எப்படிச் சமாளிக்க முடியும்?

—அறிஞர் அண்ணா [சென்னை, 5—8—56]

✽ 2-ம் பக்கத் தொடர்ச்சி

நாம் அப்போது தோட்டத்துக்கு—தென்னவரின் வாட்டம் தவிர்க்கும் திராவிடத்திற்கு வேலி போடவா மறுப்போம்? தேவையெனில் நிச்சயமாக முள் வேலி போடவும் தயங்க மாட்டோமே!

திராவிடத்தின் பாதுகாப்பு

சுதந்தர திராவிடத்திற்கு பாதுகாப்பு தேவைதானா? அப்படியானால் எந்த அளவிற்கு அந்தப் பாதுகாப்பு இருக்க வேண்டும்?—என்பன அடுத்து எழும் கேள்விகள்.

தேசியத்தோழர்களைப்போல நாங்கள்; "எங்கள் திராவிடத்தில் படை வைத்துக்கொள்ள மாட்டோம்; சேனை இருக்காது; ஆத்ம பலம் ஒன்றே எங்களுக்குப் போதும்"—என்று எந்த மேடையிலும் பேசியது கிடையாது.

சுதந்திரத் திராவிடத்திற்கு நிச்சயம் பாதுகாப்புத் தேவைதான். ஆனால் எங்கள் பாதுகாப்புக் கொள்கையும், அதைச் சார்ந்த வெளிநாட்டுக் கொள்கையும் இப்போதுள்ள தேசியத்தோழர்களுடையது போல துருப்பிடித்ததாக இருக்காது.

ஒரு ஜவகர்லால் நேருவின் பிறந்த பூமி—என்பதற்காக இப்போது காஷ்மீரிலே எவ்வளவு கோடி ரூபாய்களைப் பாதுகாப்பு என்ற பெயரிலே விரயமாக்குகிறார்கள்? எவ்வளவு உயிர்களைப் பலி கொடுக்கிறார்கள்?

நாளைய திராவிடத்தின் பாதுகாவலர்கள் அடுத்தவன் பூமிக்கு வேலி போட்டு நிச்சயம் வேதனையைத் தேடிக் கொள்ளமாட்டார்கள்!

"பாதுகாப்புத் துறையைப் பற்றி இவ்வளவு பேசுகிறீரே! நாளை திடீரென்று இலங்கை அரசு திராவிடத்தின்மீது படையெடுத்து வந்தால் என்ன செய்வீர்கள்?"—என்று கேட்கலாம்.

'தென்னவன் தோற்றதில்லை! தோற்றதில்லை!' என்று கூறி வருகிற நாம், பாதுகாப்புக்குச் செலவிட தொகை இல்லை—என்று வெள்ளைக்கொடியையா உயர்த்திப் பிடிப்போம்? சரணாகதிச் சீட்டையா எழுதி அனுப்புவோம்?

கடைசித் திராவிடனின் இருதயத்தில் கடைத்துடிப்பு இருக்கிறவரையில் நிச்சயம் அப்படிச் செய்ய மாட்டோம்.

ஆனால் வாதப்படி நாம் கற்பனை செய்து கொண்டிருக்கிறோம், சுதந்திர திராவிடத்தில் பாதுகாப்புக்குப் போதிய செலவுசெய்யத் தொகை இல்லை என்று!

அதன்படி பொக்கிஷமோ காலி; வீட்டு வாசலிலோ அன்னியப் படை!

என்ன செய்யும் திராவிட அரசு? வட நாட்டவனுக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததைப் போல சிங்களக்காரனுக்குச் சிந்து பாடி அடிமை வாழ்வு நடத்துமா, திராவிடம்? அப்போது அதன் நிலைமைதான் என்ன?

—இதே பிரச்சினை சில மாதங்களுக்கு மூன்பு பிரான்சு நாட்டிலே தோன்றியது.

அல்ஜீரியாவிலே விடுதலை வீரர்கள் குமுறும் எரிமலையோ, கொந்தளிக்கும் கடலோ—எனத்தக்க வகையிலே கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

அதை அடக்குவதற்குப் படைகளை அனுப்புவதற்கோ பிரான்சு நாட்டுக் கஜானாவில் பணமில்லை.

அப்போது அங்கே என்ன நடந்தது தெரியுமா?

"பிரெஞ்சு நாட்டுப் பிரதிநிதிகளே! உங்கள் தாயகத்திற்கு அல்ஜீரியா—என்ற பெயரிலே ஒரு காலனி இருக்க வேண்டியது அவசியந்தானா?"—என்பதுபோல பாராளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்டார், அந்நாட்டின் பிரதமர்!

அவர்களோ 'பழம் பெருமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது ஒரு காலனி தேவைதான்; அதன் மூலம் சுரண்டலும் அவயசிம்தான்'—என்று பதிலிறுத்தார்கள்.

'அப்படியானால் அந்த அல்ஜீரியாவுக்குப் படையை அனுப்பி விடுதலை வீரர்களை அடக்குவதற்கு நம்மிடம் பணமில்லை. உங்களுக்கு அல்ஜீரியா வேண்டுமானால் நீங்கள் அதன் பாதுகாப்பிற்கெனத் தனி வரி செலுத்த வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?'-என்று கேட்டார் பிரதமர்.

மக்கள் பிரதிநிதிகள் சம்மதித்து விட்டார்கள். இப்போது தனி வரி யொன்றை வசூலித்து, அதைக் கொண்டு அல்ஜீரியாவின் ஆர்பாட்டக்காரர்களைச் சுட்டுக் கொல்வதற்குச் சிப்பாய்களை அனுப்புகிறார்கள்.

இதே முறைதான்——நெருக்கடி ஏற்பட்டால் நாளை திராவிடத்திலும் நடைபெறலாம்.

இன்னொன்று; போரென ஒன்று ஏற்பட்டால் அப்போது நாட்டிலே இருக்கிற நிலைமைகளே வேறு.

சென்ற உலக யுத்தத்தின் போது வீட்டுக்கு ஒருவரைப் பலிகொடுத்திருக்கிறது, சோவியத் நாடு!

இதர ஐரோப்பிய நாடுகளிலே போர்ச் செலவிற்காக பலர் பட்டினி கிடந்திருக்கின்றனர்; தாயகத்தின் மானம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக இருக்கிற பொருளையெல்லாம் வாரி வாரிக் கொடுத்திருக்கின்றனர்.

நாமே வலியச் சென்று ஆக்ரமிப்பு வேலைகளில் இறங்கா விட்டாலும் நாளை நம்மீது யாராவது பலாத்காரத்தை உபயோகித்து, அகில உலகச் சட்டத்தை மீறுவார்களேயானால்—அப்போது திராவிட அரசியலாரிடம் பணம் இல்லாமற்போகுமேயானால்—பிரான்சு நாடு காட்டியிருக்கும் வழியைச் சுலபமாகப் பின்பற்றலாம்.

முக்கியமாக ஒன்று; இவ்வளவு 'ஆனால்'களுக்குமே தேவையில்லை. இந்தக் கட்டுரையின் முதல் பகுதியில் தெளிவாக்கியிருக்கிறபடி சுதந்திரத் திராவிடத்திற்குக் கண்டிப்பாகத் தேவையான பாதுகாப்புச் செலவு கிடைத்துத்தான் தீரும். அதற்கான பொருளாதாரமாற்றங்களை வரப்போகிற திராவிட அரசு திறம்பட இயற்றும்.

திருமணம் செய்து கொள்ளப்போகிற வாலிபனைப் பார்த்து வயோதிகன் ஒருவன் கேட்டானாம், 'ஏனப்பா? நீயோ என்னைவிட வயதிற் சிறியவன்; அனுபவம் தெரியாதவன். நீ நாளை கல்யாணம் செய்து கொண்டால் எப்படி நீ உன் மனைவிக்கு பாதுகாப்பு அளிப்பாய்?' என்று! அந்தக் கேள்வியிலே எவ்வளவு விவேகமும், வித்தாரமும் இருக்க முடியுமோ அவ்வளவேதான் இந்தக் கேள்வியிலும் இருக்கிறது—என்பதையும் நம்மால் சொல்லிக் காட்டாமலிருக்க முடியவில்லை.

வாலிபனுக்குத் திருமணம் தேவைதான். ஆனால் மனைவியின் பாதுகாப்புக்காகத் தன்னால் செலவு செய்யமுடியுமா—என்று ஒரு வீண் மனப்பிராந்தியை ஏற்படுத்திக் கொண்டு திருமணமே தேவையில்லை தனக்கு என முடிவு செய்வோனை முற்றுந் துறந்த ஞானி என்றால் மன்னித்து விடலாம்; ஆனால் சமுதாயத்தோடு ஒட்டி வாழ விரும்பும் முழு மனிதனென்றால் அவனை மன்னிக்கவே முடியாது.

அதைப் போலத்தான்; திராவிட முன்னேற்றக் கழகம் துறவியாக விரும்பவில்லை. திராவிடனை ஒரு மனிதனாக வாழச் சொல்கிறது. அதனால் அவனுக்குத் திருமணம்; தனிக் குடித்தனம் ஆகியவைகளுக்குச் சமமான சுதந்தரம்; தனித் திராவிடம்—ஆகிய கோரிக்கைகளைக் கேட்கிறது. இது எப்படித் தவறாக முடியும்?

—மாறன் எம். ஏ.

பண பலத்தால் ஏது பலன்?

ஜீப்கார் வாங்கி, மாவட்டந்தோறும் கமிட்டிகள் அமைத்து காங்கிரசார் வேலை செய்ய முற்பட்டிருப்பது, அவர்களது பலத்தை அல்ல; பலவீனத்தையே காட்டுகிறது.

காங்கிரசு தலைவர் ஒருவர் ஜீப் ஒன்றில் ஏறி, கரடு முரடான பாதை வழியாகச் சென்று, ஆறு ஒன்றைக் கடந்து, ஒரு கிராமத்தை அடைந்து, அங்குள்ள மக்களைச் சந்தித்தால், அந்த மக்கள் என்ன கேட்பார்கள், காங்கிரஸ் தலைவரிடம்? 'ஆற்றை எப்படிக் கடந்தீர்கள்?' என்று கேட்டால், 'ஜீப்கார் மூலம் கடந்தேன்' என்று தலைவர் கூறுவார். 'அப்படியா? ஆற்றில் தண்ணீர் வந்து விட்டால் தீவில் அகப்பட்டவர்களைப் போல நாங்கள் கிராமத்தை விட்டு அடுத்த நகரம் செல்ல முடிவதில்லை; தொல்லைப்படுகிறோம்; நீங்கள் ஜீப்காரில் ஆற்றைக் கடந்ததாகக் கூறுகிறீர்களே! சரி; என்ன வேண்டும் உங்களுக்கு?' என்று கேட்பர் கிராம மக்கள்; 'எங்களுக்கு ஓட்டு வேண்டும்' என்று கேட்பார் காங்கிரஸ் தலைவர்!

"ஓகோ அப்படியா? நாங்கள் ஆற்றைக் கடக்க வழியின்றித் தவிக்கும்போது, நீங்கள் ஜீப் காரில் கடந்து வருகிறேன் என்றீர்களே! அதற்காகவா ஓட்டு கேட்கிறீர்கள்?" என்றுதான் மக்கள் கேட்பரே தவிர, 'ஓட்டு வேண்டுமா? தருகிறோம்' என்று கூறிடமாட்டார்கள், நம்மிடம் பணபலம் இல்லை என்று கூறிடுவோர்—குறிப்பாகக் காங்கிரசார் இதை மறந்துவிடக் கூடாது!

—அறிஞர் அண்ணா [சென்னை, 5—8—56]

தொட்ட கை மணக்கும்!

'ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நான் பேசுகிறேன்' என்று கூறிடுகிறாரே மார்தட்டி, தோழர் பி. டி. இராசன்—அவர் ஒருவர்தான் என்றாலும், 'தான் ஒரு கட்சியின் பிரதிநிதி' என்று மார்தட்டி கூறிட முடிகிறதே !

அதுபோல, பலரல்ல—நம்மில் ஒருவர் சட்டசபையில் இருந்தாலும் போதும்; 'தொட்ட கை மணக்கும்' என்பது போல, நம்மில் ஒருவர் சட்டசபையில் உட்காரும் இடத்தில் புரட்சி மணம் எழும்.

மேலும், நம்மில் சிலர் சட்டசபையில் இருந்தால், தவறக்கூடிய சிலரும் தவறமாட்டார்கள்.

நம்மில் பத்துபேர் இப்போதைய சட்டசபையில் இருந்திருந்தால், இராமசாமி படையாச்சியும் மாணிக்க வேலரும் தவறியிருப்பார்களா? இப்போது இருப்பவர்கள், இவர்கள் தவறும்போது தவறை எடுத்துக் காட்டிக் கண்டித்தவர்கள் அல்ல; 'உனக்கு அந்தச் சான்ஸ்' கிடைக்கிறது, எனக்குக் கிடைக்கவில்லையே?' என ஏங்கியவர்கள் தான். நம்மில் சிலர் இராமசாமி படையாச்சி அந்தப் பக்கம் (மந்திரி சபைப் பக்கம்) பார்க்கும்போதே, 'அந்தப் பக்கமா?' என்று ஏறிட்டு விழித்திருந்தாலே, தவறு இழைக்கத் துணிந்திருக்க மாட்டார்கள் !

—அறிஞர் அண்ணா [சென்னை, 5—8—56]

★ வருகிறார், வடநாட்டுக் காவலர்! ★

வருக, வருக! வசந்த காலத்து இளந் தென்றலே வருக! எமது வாட்டம் தவிர்க்கும் மாசில்லா ரோஜாத் தோட்டமே வருக! மக்கள் தலைவரே வருக! வந்து எம்மை ஆட்கொண்டு அருள் புரிய வருக!

அய்யனே போற்றி! மெய்யனே போற்றி! உன் திருவடிகளே சரணம்! உன் பாத கமலங்களே எமது தலைக்குக் கிரீடம்! எனவே விரைவினில் வருக!—என்றெல்லாம் கூறிக்கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சென்னைத் தேசியத் திருவாளர்கள் ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத்தின் வருகைக்காக ஆர்பாட்டம் செய்து கொண்டு வருகிறார்கள்!

தினந் தினம் வீதிகளிலே குதிரைப் படைகள் ஊர்வலமாக அணிவகுத்து வருகின்றன!

கூட்டம் கூட்டமாய் ஆகாய விமானங்கள் வானத்தில் பறந்து ராஷ்டிரபதிக்கு எங்ஙனம் மரியாதை தெரிவிப்பது—என்பது குறித்து ஒத்திகை பார்த்து வருகின்றன, நாடகக் காரர்களைப் போல!

ஆமாம்; நாடகம்தான்! அரசியல் நாடகம்; ஏகாதிபத்ய நாடகம்!

ஜனாதிபதி ரஜேந்திர பிரசாத் தென்னாட்டில் ஆகஸ்ட்-15 சுதந்திர நாள் கொண்டாட்டத்திலும், வடநாட்டில் ஜனவரி-26 குடியரசு நாள் கொண்டாட்டத்திலும் கலந்து கொள்ளும் திட்டத்தின் விளைவுதான் இது!

இப்படியெல்லாம் செய்து தென்னாட்டுக்கும், தூரத்திலிருக்கும் வடநாட்டுக்கும் உள்ள பேதத்தைக் குறைக்கப் போகிறார்களாம், இந்நாட்டை வேட்டைக் காடாக்க நினைக்கும் சுரண்டல் சூரர்கள்!

ராஜேந்திரர் இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக—பல குதிரை ஓட்டுவதற்குப் பயன்படும் பிரத்யேகக் 'கோச்சு' வண்டிகள் டில்லியிலிருந்து சென்னை வரப் போகின்றனவாம்!

வைசிராய்களும், கவர்னர் ஜெனரல்களும் டெல்லியின் ராஜ வீதிகளில் பவனி வந்த 'கோச்சு' வண்டி ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியன்று சென்னை மவுண்ட் ரோடிலும் பவனி வரப்போகிறது!

வண்டியிலே பேதமில்லை; அதில் அமர்ந்திருப்பவர்தான் மாறுபட்டிருக்கிறார்!

அப்போது தேம்பியழும் 'இந்தியனை'த் தேற்ற முடியாத வெள்ளையன் நகர் வலம் வந்தான்!

இப்போதோ தேய்ந்துவரும் திருவிடத்தைத் திரும்பிப்பார்க்கவும் மனமில்லாத வட நாட்டின் காவலர் வருகிறார்!

அன்று தேம்ஸ் நதிக்கரைக்கு இங்கிருக்கும் செல்வத்தையெல்லாம் சுரண்டிச் செல்லும் சிறு மதியாளரின் பிரதிநிதி 'பராக்கு'கள் பெற்றான்!

இன்றோ காவிரிநதி தீரத்திலிருந்து வரிப்பணத்தையெல்லாம் வாரிச் செல்லும் வடநாட்டுப் பிரதிநிதி 'ஜே' கோஷம் பெறுகிறார்!

ராஜேந்திரர் சென்னைக்கு வந்தால் தென்னாட்டுக்கும், வடநாட்டுக்கும் பாலம் போடப்பட்டுவிடுமாம்; இங்குள்ள திராவிடர்கள் தாங்கள் எல்லோரும் இந்தியர்கள்தான்—எனக்கருதிவிடுவார்களாம்! ஏக பாரதக் கொள்கை ஸ்தாபிக்கப்பட்டு விடுமாம்! திராவிட நாட்டுக் கோரிக்கை தகர்த்தெறியப்பட்டுவிடுமாம்!

பாவம்! இப்படியெல்லாம் மனக் கோட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள், ஏகாதிபத்ய மோகத்தால் இந்த நாட்டைக் கட்டியாள நினைக்கும் கபடர்கள்!

புயலால் வாடினோம்; தஞ்சை திருச்சியின் நஞ்சை புஞ்சை நிலங்களையெல்லாம் வெள்ளக்காடு விழுங்கியபோது விம்மி அழுதோம்—அப்போது ஆறுதல் சொல்ல யாரும் வரவில்லை டில்லி சாம்ராஜ்யத்திலிருந்து!

பண்டித நேருகூட அப்போது இங்குதான் இருந்தார்; மலையாளப் பிரதேசத்து உப்பங்கழிகளிலே உல்லாசப் படகோட்டி மகிழ்ந்தார். ஓடிவந்து ஒரு வார்த்தை சொல்லவில்லை. ஆனால் இன்றோ ஆனந்த சுதந்தரம் பெற்றுவிட்டோம் என்று பாடிக் காட்ட வருகிறார் ராஜேந்திரர்!

ஆலைகள் இல்லை இங்கே; ஆனால் ஆலையிட்ட கரும்பாக அவதிப்படுகிறார்களே மக்கள்; இதற்குப் பதில் என்ன என்று கேட்டால் ஜனாதிபதியை அனுப்பி வைக்கின்றனர்!

பாவம்; ஏகாதிபத்தியப் பித்தம் தலைக்கேறியவர்கள் தாங்கள் இன்னதுதான் செய்கிறோம் என்பது தெரியாமல் கூத்தாடுகிறார்கள்!

—இந்த நாடகங்களால் நசுங்கிவிடுகிற அளவுக்கு தென்னகத்தின் விடுதலைப் போராட்டம், என்ன அவ்வளவு சாமான்யமாகவா ஆகிவிட்டது?

ஆனால் திராவிடர் இயக்கத்திற்கு இதுவுமொரு வெற்றிதான்!

டெல்லியிலேயே முடங்கிக் கிடந்த ஜனாதிபதியை சென்னைக்கு வரவழைத்துவிட்டது, நமது பிரச்சாரம்!

இன்னும் சிறிது நாட்கள் சென்றால் முன்பு அனந்த சயனம் அய்யங்கார் குறிப்பிட்டதைப்போல தலைநகரையும், பாராளு மன்றத்தையும்கூட ஆண்டுக்குப் பாதிநாட்கள் தென்னகத்துக்கு மாற்றிவிடுவார்கள்! முகமது துக்ளக் செய்யவில்லையா, டில்லியிலிருந்து தலைநகரை தேவகிரிக்கு மாற்றி, பிறகு தேவகிரியிலிருந்து திரும்பவும் டில்லிக்கே—கூடாரத்தை மாற்றினானே, அந்தக் கதையைத்தான் இப்போது திருப்பிப் படிக்கிறார்கள்!

ரோம சாம்ராஜ்ய தளபதிகள் பவனி வரும்போது அவர்களுக்கு முன்னால், அவர்கள் பிடித்துவந்த அடிமைகள் அணிவகுத்துச் செல்வார்கள்!

இங்கும் அப்படித்தான் நடக்கப் போகிறது.

வடநாட்டுக்கு எடுபிடிகளாக இருப்பதிலேயே நாட்டம் கொண்டிருக்கும் காமராசரும், சுப்ரமணியமும் சாமரம் வீச ஏகாதிபத்யச் சக்கரத்தை உருட்டிக் கொண்டு வரப்போகிறார், ராஜேந்திரர்!

அவருக்கான கோச்சு வண்டி நமது வரிப்பணத்திலே டெல்லியிலிருந்து இங்கு வந்திருக்கிறது.

பாவம்; திராவிடப் பிரிவினையை அமுக்கி வைப்பதற்குத்தான் இது போன்ற ஏற்பாடுகளென்றால் நிச்சயம் அவர்களுக்காகப் பரிதாபப்படுகிறோம்! ஏமாற்றம்தான் உங்களுக்குக் கிடைக்கப்போகும் பரிசு—என்றும் எச்சரிக்கிறோம்!

காமராசர்களும், சுப்ரமணியங்களும் சாமரம்வீச ஆகஸ்டு 15-ம் தேதியன்று சென்னையில் பவனி வரப்போகிறார், ராஜேந்திரர்!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ் நாட்டினர் கொண்டுள்ள கருத்தையும், குறிப்பாக அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளை அறியவும், அதுபோன்று அப்பிரச்சினையின் உண்மை விவரங்களை தமிழ் நாட்டினருக்கு அறிவிக்கவும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வன்னியசிங்கம் அவர்கள், கடந்த 10-தினங்களாகச் சென்னையில் தங்கியிருந்து, முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்களைக் கண்டுபேசும் தமது திட்டத்தின்படி, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களையும் சந்தித்துப் பேசினார்.

மலேயாவுக்கு நடிப்பிசைப் புலவர்!

நாடகத் துறைமூலம் நல்ல கருத்துக்களைப் பிரச்சாரம் செய்ய முடியும்—என்பதைத் தென்னகத்தில் நிலை நாட்டி வெற்றி கண்ட நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள், கடல் கடந்து, மலேயா நாட்டிலும் இன எழுச்சிப் பண்பாட ஆகஸ்ட் 3-ம் தேதியன்று தனது குழுவினருடன் ஆகாயவிமானத்தின் மூலம் புறப்பட்டார்.

இரண்டு திங்களுக்குக் குறையாது கலைப்பணியாற்றச் செல்லும் அன்னாரை வாழ்த்தி வழியனுப்ப 25—7—56 அன்று இலட்சிய நடிகர் ராஜேந்திரன் நாடகக் குழுவினர் சென்னை 'உட்லண்ட்ஸ் ஓட்ட'லில் அறிஞர் அண்ணா தலைமையில் தேநீர் விருந்தொன்று நடத்தினர். மாலைச் சிற்றுண்டிக்குப் பிறகு கலைத்துறை அன்பர்கள் பலரும் நடிப்பிசைப் புலவருக்கு வாழ்த்துக்கூறினர். இறுதியில் தோழர் ராஜேந்திரன் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

ஆகஸ்ட் 3-ம் தேதி யன்று சென்னை மீனம் பாக்கம் விமான நிலயத்தில் நடிப்பிசைப் புலவரையும், அவரது குழுவினரையும் நண்பர்களும், கலைஞர்களும் வழியனுப்பிவைத்தனர்.

தி. மு. க. வின் பணிக்கு பாராட்டு!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகம் நீண்டகாலமாக ஆற்றி வரும் பணியினையும், கொண்டுள்ள திட்டவட்டமான கொள்கையையும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் வன்னியசிங்கம் மனமாரப் பாராட்டினார்.

மேலும், அவர் தமது எண்ணத்தைத் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழர்கள் பண்டார நாயகா ஆட்சியினரால் அண்மையில் அனுபவித்த கொடுமைகளைச் சுட்டிக்காட்டும் வகையில், தி. மு. கழகம் வெளியிட்ட சுவரொட்டிகளின் மூலம் தமிழக மக்களின் பெரும் அனுதாபத்தைத் தேடித் தந்திருக்கின்றன என்றும், சென்னை கோகலே மண்டபத்தில் தோழர் எச். டி. ராசா எம். பி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில், தி. மு. கழகச் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்தினை தோழர் எச். டி. இராசா அவர்கள் மூலம் அறிந்து மிகவும் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைந்ததாகவும், அதுபோன்றே 22—8—56 அன்று சென்னையில் நடைபெற்ற தி.மு. கழக மாபெரும் கூட்டமொன்றில் தாம் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றமைக்குப் பெருமையும், பூரிப்பும் அடைவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள தி. மு. கழக நிர்வாகிகளும், தோழர்களும் இப்பிரச்சினையில் மிகத் தீவிரமாகவும் மனப்பூர்வமாகவும் தங்களின் பேராதரவைத் தந்து வருவது பாராட்டத்தக்கதாகுமென்றும் திரு. வன்னியசிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

ஆனால், இங்குள்ள தேசியப் பத்திரிகைகள் இச்செய்திகளை இருட்டடிப்பு செய்து வருவதைக் காணும்போது மிகவும் வேதனைப்படுகிறேன் என்றும் தெரிவித்தார்.

மேலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையின் விளக்கங்களைப் பற்றி தத்தமது கருத்துக்களைத் தலைவர்கள் தெரிவித்துக் கொண்டனர்.

(28—7—56 அன்று சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டலில் தரப்பட்ட தேனீர் விருந்தில் நமது பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் கலந்து கொண்டனர்.)

❋ 5-ம் பக்கத் தொடர்ச்சி

தரிசியைவிட்டே பேசி அனுப்பிவிட்டேன். இதிலிருந்தே எனக்கு உங்கள் மீதுள்ள அன்பு தெரியவில்லையா?

ஒரு சாது: அது கிடக்கட்டும்; ஒரு கோரிக்கை.

நேரு: என்ன அது?

சாது: இந்தியா பூராவிலும் பரந்து கிடக்கும் ஆண்டி மடங்களை நீங்கள் தயவு செய்து தேசிய மயமாக்கிவிடக் கூடாது. அப்படிச் செய்தால் நாங்கள் உடனே அரசாங்க எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துவிடுவோம்!

நேரு: சே; சே! அப்படியெல்லாம் செய்து எங்கள் திட்டத்தைக் குலைத்து விடாதீர்கள்.

நேருவின் பேரன்: என்ன தாத்தா, அது? ஐந்தாண்டுத் திட்டத்துக்கு இந்தப் பரதேசிகளா பிரச்சாரம் செய்யப் போகிறார்கள்?

நேரு: ஆமாண்டா, கண்ணு! இவர்களைத்தான் அமர்த்தப் போகிறேன்.

பேரன்: அதனால் நமக்கு தீமைதான் தாத்தா வந்து சேரும்!

நேரு: எப்படியடா?

பேரன்: உதாரணமாக, ஒரு வீட்டு வாசலில் நின்றுகொண்டு திட்டத்துக்கான பிரச்சாரப் பாட்டைப் பாடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த வீட்டுக்கார அம்மா என்ன தெரியுமா கேட்பாள்! 'ஏனப்பா ஐந்தாண்டுத் திட்டம் வெற்றியடைந்து நாட்டின் சுபீட்சம் பொங்குவதாகக் கூறுகிறாயே; சுபீட்சம் பொங்கினால் உன் போன்ற பரதேசிகள் எல்லாம் ஒழிந்திருக்க வேண்டுமே — பிச்சைக் காரர்கள் தொகை குறைந்திருக்க வேண்டுமே! இதிலிருந்தே நீங்கள் போலிப் பிரச்சாரம் செய்கிறீர்கள் என்பது தெளிவாகிறதே!"—என்றல்லவா கேலி பேசுவார்கள்?

நேரு: அய்யையோ; ஆமாம்!

[சாதுக்கள் திகைப்படைகின்றனர். நேருவுக்கும் ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பம் நிலவுகிறது.]

தி. மு. கழக மாவட்ட உறுப்பினர் கூட்டங்கள்

தஞ்சை மாவட்டம்

"12-8-56 காலை 9-30 மணிக்கு, தஞ்சாவூர் பூக்காரத் தெரு நாடார் தோட்டத்தில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட இருப்பதால், மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் அறிவிக்கிறார்.

தென்னாற்காடு மாவட்டம்

"12-8-56 காலை 10 மணிக்கு, கடலூர் (என். டி.) 'ஓட்டல் பிருந்தாவன'த்தில் நடைபெறும். (1) எனது விலகல் கடிதத்தை அங்கீகரித்தல், (2) துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில் புதுச் செயலாளர் தேர்தல்—ஆகியவை நடைபெற இருப்பதால், தவறாது வருகை தர வேண்டுகிறேன்,"

என்று, மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள் அறிவிக்கிறார்.

இராமநாதபுரம் மாவட்டம்

"12-8-56 மாலை 3 மணிக்கு, விருதுநகர் நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில் நடைபெறும். வரவு செலவு ஒப்பேற்றல், மாநில மாநாட்டுத் தீர்மானங்கள், மாவட்ட மாநாடு — முதலியன குறித்து முடிவு செய்ய வேண்டியிருப்பதால், தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, மாவட்டச் செயலாளர் தோழர் இல. ம. சவுந்திர பாண்டியன் அவர்கள் அறிவிக்கிறார்.

வடாற்காடு மாவட்டம்

"12-8-56 மாலை 2 மணிக்கு, வாணியம்பாடியில், தோழர் முல்லை-வடிவேல் அவர்கள் இல்லத்தில், நடைபெறும். அவ்வமயம் மாநில மாநாட்டின் தீர்மானங்களைப் பற்றியும், பொதுத் தேர்தலைப் பற்றியும் ஆலோசிக்கப்படும். உறுப்பினர்கள் தவறாது வருகைதர வேண்டுகிறேன்,"

என்று, மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அவர்கள் அறிவிக்கிறார்.

'தமிழ் வாழ்க!'

'ஆவ்' என்று பயங்கரமாக அலறிக் கொண்டு, "தொபீர்" என்று தண்ணீரில் விழுந்தான் அந்தச் சிறுவன்.

அதள பாதாளமான ஆழ்கடல்; திக்கு திசை தெரியாத நடுப் பகுதி; அதிலே அரைகுறையாக நீந்தத் தெரிந்த அந்தத் தம்பி—என்ன செய்வான் அவன்? குரலெடுத்துக் கத்தினால் காப்பாற்ற ஓடிவருவார் யார்?

அவன் கால்களையும் கைகளையும் மனம் போனபடி அடித்துக் கொண்டு நீந்தத் தொடங்கினான். கரை எங்கே இருக்கிறது? எந்தப் பக்கத்தில் இருக்கிறது? நீந்திச் செல்ல முடியுமா?—இதைப் பற்றி எல்லாமா யோசிக்க முடியும்? அகண்ட வாய் திறந்து, கோரப் பற்களைக் காட்டி, அவனை விழுங்கி விடக் காத்திருக்கிறதே சாவு, அதிலிருந்து தப்ப வேண்டாமா? சோம்பேறிக்கும் அந்த நேரத்தில் புதியதோர் தெம்பு வருமே! வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே உள்ள நெடுந்தூரம், ஒரே கணத்தில்கூட, கண்மூடி கண் திறக்கும் நேரத்தில்கூட கடுகளவில் நெருங்கிவிடும் என்பதை உணராத அந்தப் பைத்தியக்காரன், வாழ்வதற்காகத் தவித்தான். நடுக் கடலில் போராடினான்.

அதோ, நீருக்குள் மறைந்து மறைந்து எழும் அவன் முகத்தில் எங்கிருந்தோ புன்னகை தோன்றுகிறதே! இந்த நேரத்திலும் அவனுக்கு களிப்பு தரும் நினைவு என்னவாக இருக்கும்?...அவன் நினைத்தான்; நினைத்து மகிழ்ந்தான்...இதோ அவனது எண்ண அலைகள்...

ஒடிந்துபோன பழைய சீப்புதான் அது; ஆனால் அதைக் கொண்டு என்ன அழகாக என் தலையை சீவிவிடுகிறாள் அம்மா!... பொழுது விடியும் நேரம் முதல் என்னைப் பள்ளிக்கூடம் அனுப்புவதற்குள் அவள் என்ன பாடு படுகிறாள்!...

மணி ஒன்பது! "அம்மா, நேரமாயிட்டு அம்மா..." என்று நான் கத்துகிறேன்...அம்மா என்னை கையைப் பிடித்து அழைத்து வாசலுக்கு வருகிறாள். தெருவை நன்றாகப் பார்க்கிறாள், கார்—லாரி ஏதாவது வருகிறதா என்று... பிறகுதான் "பத்திரமாகப் பார்த்துப் போ கண்ணு!" என்று வழி அனுப்புகிறாள். என்னைக் கட்டி அணைத்து உச்சந்தலையில் முத்தமிடுகிறாள். நானும் பதிலுக்குக் கன்னத்தில் முத்தமிடுகிறேன். தெருவில் இறங்கி ஓடுகிறேன்...

தெரு முனை சென்றதும் ஏனோ திரும்பிப் பார்க்கிறேன். அம்மா தூணைப் பிடித்துக் கொண்டு வாசலிலேயே நிற்கிறாள்......ஐயோ அம்மா...

அவன் கைகளும் கால்களும் சோர்ந்து போய்விட்டன.

...சோர்ந்துபோய்தான் வீடு திரும்புவேன் நான். வாசலிலேயே நின்று தாவி அணைப்பாளே அம்மா! ...அம்மா நல்லவள்; படித்தவள்! பாடப் புத்தகத்தில் இருந்தவை களைவிட—இல்லாதவைகள் எவ்வளவு கற்றுத் தருவாள் எனக்கு! தமிழ் நாட்டைப் பற்றி அவள் கதை கதையாய் சொல்லுவாளே! தமிழ் நாட்டின் பழஞ் சிறப்புகள் — பண்டைய மன்னர்களின் வீரக் கதைகள்—அப்பப்பா! என்னென்ன சொல்லுவாள். "கண்ணே! அங்கே தாண்டா பிழைக்க வழியின்றி இந்த இலங்கைத் தீவுக்கு ஓடிவந்தோம் நானும் உன் அப்பாவும்! தேயிலைக் காடுகளில் நாம் படும் அல்லல்களை-மாட்டினும் கேடாய் உழைக்கும் கொடுமையை இனியும் பொறுக்கமாட்டாள் மகனே, தமிழ் அன்னை! நாம் சீக்கிரம் நம் நாடு சென்று விடுவோம்..." என்று சொல்லுவாள்; கண்ணீர் விடுவாள். நான் காணாத தமிழகத்தைப் பற்றி இரவெல்லாம் கதை கேட்பேன், அப்பா அம்மா இருவரிடமும். தமிழ்நாட்டுக்குப் போக வேண்டும் என்று என் நெஞ்சில் எழுந்த ஆசை...அந்த ஆசையை வளர்த்த என் அன்னை...

ஒரு முறை நீருக்குள் மூழ்கி எழுந்தான் அவன். மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது... ஆனால் அவனது அன்புத் தாயின் நினைவோ அகலவில்லை....

அந்த அன்னைதான் ஒரு நாள் ஐயோ...அதோ, தீயிலே வெந்து கருகிப்போன கட்டையைப்போல கிடக்கிறாளே! பள்ளிக்குச் சென்று திரும்பிய நான், அந்தப் பயங்கரக் காட்சியையா காண வேண்டும்? அம்மா' என்று அலறுகிறேன்... என் வீட்டுக்குப் பூட்டிட்டு, பின் தீயுமிட்ட வீணர்கள் பின்னால் நின்று 'ஆகாகோ!' என்று அலறுவதைப் போல இருக்கிறது! என் தந்தை தமிழராம்; இலங்கையிலே அன்னை மொழியாம் தமிழுக்கு இழைக்கப்படும் அநீதி கண்டு வாடுபவராம்; அதற்காகப் போராடுபவராம்; புரட்சிக்காரராம்; அழிக்கப்பட வேண்டிய விஷப் பூச்சியாம்; ஐயையோ!........நாசவேலைக்காரர்கள்; அவர்களுக்கே நல்லது செய்யும் நாடாள்வோர் — சதி செய்யத் துவங்கிவிட்டனர். முதல் பலி என் அன்னையா?...நான் குமுறிக் குமுறி அழுகிறேன்... சாம்பல் மேடாய் காட்சி அளித்த எங்கள் குடிசையில் என் அன்னைக்கு தீபமேற்றுகிறேன். என் கைகள் நடுங்குகின்றன. என்ன; என் செவிகளின் ஏதோ விழுகின்றனவே...என் அம்மாவின் குரல்தான்— "தம்பீ!......அன்புள்ளவனே!...சங்கத் தமிழ் வளர்த்த நாடு தங்கம் விளையும் காடு—அதுதான் நம் சொந்த வீடு! சாவதற்குள் ஒரு முறை அந்த தமிழ் மண்ணை மிதித்துவிட வேண்டுமடா கண்ணே!..."-அடிக்கடி சொல்லுவாள்; மாண்ட பின்னும் சொல்லுகிறாளோ...

கண்களிலிருந்து 'குபுக்' கென்று பாய்ந்தோடிய கண்ணீர் கடல் நீரோடு கலந்தது. அவன் கண்கள் இருண்டன. ஆனால் ஒளி வீசிய மனக் கண்களின் முன்னே அவன் தந்தை வந்தார்...'

தமிழுக்காகப் போராடிய ஆயிரமாயிரம் வீரர்களில் ஒருவர் அவர்! தமிழகம் அவரைக் காக்கவில்லை; ஆனால் தமிழ் காக்க அவர் புறப்பட்டார்!

அன்று...அப்பா எங்கேயே கிளம்பினார். அவர் முகத்தில் ஏதோ ஒரு உறுதி கலந்த ஆவேசம்... நான் பயந்தபடி அவரிடம் நெருங்கினேன்....அன்று இலங்கையிலே புதிய சட்டம் இயற்றப்பட இருக்கிறதாம். தமிழைத் தள்ளி வைப்பதோடு மட்டுமல்ல; ஆழக் குழி தோண்டியே புதைத்துவிட அரசாள்வோர் முடிவு செய்துவிட்டார்களாம்......ஆகவே போராட்டமாம்; அப்பா புறப்படுகிறார்.

அவன் நினைவுகளில் மீண்டும் சோகம் கலக்கிறது போலும்... அவன் ஏனோ 'ஐயோ' என்று அலறினான்.

'ஐயோ!' என்றுதான் அலறினார் அப்பா! ஆனால் அதைத் தொடர்ந்து 'தமிழ் வாழ்க' என்றும் முழங்கினார்.

அதோ, பூமியிலே மலை போல சாய்ந்து கிடக்கும் அவரிடம் நான் ஓடுகிறேன்......மார்பிலே குண்டு பாய்ந்து, வழிந்தோடிய குருதி சிங்கள மண்ணை சிவப்பாக்குகிறது..."அப்பா!"! என்று அலறுகிறேன். ஆ, அவர் கண்கள் திறக்கின்றனவே! அதிலே ததும்பி நின்ற கண்ணீரிலே என் முகம் பிரதிபலிக்கிறதே...ஐயோ; அவர் கண்கள் மூடிவிட்டன; தமிழ் காக்க உயிர் துறந்த பல வீரர்களில் ஒருவராகிவிட்டார், என் அப்பா!...

அவன் மூச்சு இளைத்தது. குலைந்துபோன குடும்பத்தில் எஞ்சி நின்ற அவன், இலங்கை மண்ணிலே கதியற்றவனாக நடமாடித் திரிந்த காட்சி அவன் கண் முன் நிழலாடின. காற்றிலும், மழையிலும், கடும் வெய்யலிலும் அவன் கலங்கித் தவித்த நிலை...தாயகம் திரும்பி அவனுக்குக் கிடைத்த வாய்ப்பு...

ஓர் இரவு...அனுராதபுரம் கடற்கரையில் உருண்டுகிடந்த என் கண்களின் முன் ஒரு பாய்மரத் தோணி தென்படுகிறது...நான் ஓடுகிறேன். அதில் இருந்தவர்கள் ஏதேதோ செய்கிறார்கள். நான் அதைப் பற்றி எல்லாம் கவலைப் படுவானேன்? அவர்கள் பேசியதை உற்றுக் கேட்கிறேன். இருட்டுதானே, என்னை யாரும் பார்க்க முடியாதே! "சீக்கிரம், சீக்கிரம்! உடனே திரும்பவேண்டும்...விடிவதற்குள் தமிழ் நாட்டுக்குப் போய்விட வேண்டும்!...ம்...ம்'.., என்று யாரோ பேசுகிறார்கள். நான் அதற்கு மேல் ஏன் யோசிக்கிறேன்?...தோணியில் ஏறி இருட்டில் ஒளிந்து கொள்கிறேன்... சற்று நேரத்தில் தோணி புறப்படுகிறது. காற்று 'சில்'லென்று வீசுகிறது; என் மனதிலும் புதிய குளிர்ச்சி! என் அன்னை பிறந்த அன்னை நாட்டைக் காண போகிறேன்...உழைப்போடு உயிரையும் பறிக்கும் சிங்களபூமி இனி எனக்கு ஏன்?..."வா, மகனே வா!" என்று அழைக்குமே என்னை, என் தமிழ் நாடு!...

தாயக நினைவு அவன் மனதிலே மகிழ்ச்சியைத் தந்திருக்கத்தான் வேண்டும்; அவன் சிரித்துக் கொண்டான்.

சிரித்துக் கொண்டுதான் இருந்தேன், பொழுது விடியும் நேரம்; தோணியில் பதுங்கிக் கிடந்த என்னை எப்படியோ பார்த்துவிட்டானே, தோணித் தலைவன்! பாவி, முரடன்; மூர்க்கன்; முழு முட்டாள்—என்னைப் புலிபோல பார்க்கிறான்... அதோ, என்னைப்பற்றித்தான் ஏதோ பேசுகிறான்—'பயலை நம்பக் கூடாது! நம்ப கள்ள வியாபாரத்தைக் காட்டிக் கொடுத்துவிடுவான்...' என்று உறுமுகிறான். என்னை நெருங்குகிறான்...நான் பயப்படுகிறேன்...அவன் நீண்ட நகங்கள் கொண்ட தன் முரட்டுக் கரங்களை விரித்து என்னை நோக்கி வருகிறான். நான் பின்னாலேயே நகர்ந்து போகிறேன். ஐயோ!... தோணியின் விளிம்புக்கு வந்துவிடுகிறேனே! அவன் நெருங்கிவிடுகிறான்...நான் தவிக்கிறேன்... கீழே பார்க்கிறேன்...தண்ணீர்!... தண்ணீர்!!......தண்ணீர்!!!...அவன் என் கழுத்தைப் பிடிக்கிறானே...

"ஆ, ஐயோ!"—என் அலறல் அலையோசையோடு கலந்தது!

❋

அவன் கண்கள் மங்கின; கைகள் செயலற்றன; இரண்டு முறை மூழ்கி மூழ்கி நீர் குடித்தான்.

❋

அன்னை நாட்டின் மண்ணை மிதிக்கத் துடித்த அந்த பரிதாபத்திற்குரிய தம்பியின் உயிரற்ற உடல், இரண்டு நாட்கள் கழித்து, தஞ்சை மாவட்டத்தில் உள்ள அதிராம்பட்டின கடற்கரையோரத்தில், கேட்பாரற்று ஒதுங்கிக் கிடந்தது!

—'சொர்ணம்'

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

முகமது உசேன்;
அருப்புக்கோட்டை.

(?) இந்தியின் பெருமை பற்றி ஊர் ஊராய் பிரச்சாரம் செய்து வரும் காமராசரை தமிழ்த் தாயின் தவப் புதல்வரே—என்று வரவேற்பதின் பொருள் என்ன?

தவறு நண்பரே. தமிழ்த் தாயின் சவப் புதல்வரே! - என்பதற்குப் பதில் அப்படி அழைத்திருப்பார்கள்!

எஸ். மாசிலாமணி;
கீழ்நாச்சிகுளம்.

(?) ஆகஸ்ட் 15-க்கும், ஜூலை 15-க்கும் உள்ள வேறுபாடு என்ன?

ஆகஸ்ட் 15 வெள்ளையன் வெளியேறிய நாள்! ஜூலை 15 அவனைவிடக் கொடுமை மிக்க வடநாட்டான் வெளியேற வேண்டிய நாள்!

எஸ். எத்ராஜ்; நாகை.

(?) காசிக்கும் குமரிக்கும் சாலை வேண்டுமென்று விரும்புகிற காமராசர் கங்கையைக் குமரிக் கடலில் பாயும்படிச் செய்ய விரும்புவாரா?

எப்படி விரும்புவார்? அவர்தான் காவிரிநதியையும், அது தரும் பலனையும் டெல்லிக்கே திருப்பி விடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவராயிற்றே!

எஸ். ஏ. எழிலரசு;
கல்லிடைச்குறிச்சி.

(?) ஒளியை இழந்த கண்ணுக்கும், கற்பை இழந்த பெண்ணுக்கும் உள்ள வித்யாசம் என்ன?

கண்ணுக்குப் பார்வை திரும்பிவர வழி உண்டு; ஆனால் பெண்களுக்கோ, காங்கிரசின் செல்வாக்கைப்போல இழந்த சற்பு திரும்பிவருவதற்கு வழியே கிடையாது?

கி. சத்தியசீலன்; சேண்பகச்சேரி

(?) சென்ற பொதுத் தேர்தலுக்கும், வருகிற பொதுத் தேர்தலுக்கும் என்ன வித்யாசம்?

உதயசூரியன்—சின்னம் முன்பு உதிரிகளின் சின்னமாய் இருந்தது. வரும் தேர்தலிலோ அது தி. மு. கழகத்தவரின் சின்னமாக இருக்குமென்று அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த பொதுக் கூட்டத்தின்போது அறிவித்திருக்கிறார்!

கே. எம். ராமசாமி;
குச்சிப்பாளையம்.

(?) தசாவதாரத்துக்கு அடுத்த அவதாரம் என்ன?

சாமராசரின் 'பச்சோந்தி' அவதாரம்!

மணிவண்ணன்; திருவனந்தை

(?) காங்கிரஸ்காரர்களை மட்டும் குறைகூறுகிறீர்களே; நீங்கள் மட்டும் அவர்களைத் திட்டாமலா இருக்கிறீர்கள்?

அரசியற் களத்துக்கு அவர்கள் வரும்போதுதான் நாங்கள் அவர்கள் மீது ஈட்டிகள் எறிவோம்; இதைத் தாங்கிடும் வன்மை உண்டா உமது கேடயத்திற்கு—எனக் கேட்டு வேல்களைப் பாய்ச்சுவோம். அவர்களோ அதற்கெல்லாம் பதில் சொல்லத் தெரியாமல் புழுதிவாரி வீசுகிறார்கள்! இதுதான் தோழரே, தாக்குதலுக்கும், திட்டுதலுக்கும் உள்ள வித்யாசம்!

எஸ். ஏ. அமீர்; கொழும்பு-6.

(?) ஆச்சாரியாரின் மூக்குக் கண்ணாடியும் ராமசாமி. படையாச்சியின் மூக்குக் கண்ணாடியும் எதைக் குறிப்பிடுகின்றன?

முன்னது விஷம்; அடுத்தது வேஷம்— ஆகியவற்றைத்தான்!

ஏ. பஸ்லுல்லா பாச்சா; வேலூர்.

(?) காமராசர் ஓய்வு நேரங்களில் என்ன செய்கிறார்?

பிண்ணாக்கு அரைக்கிறார்— தேர்தல் "மாட்டி"ற்குத் தீனி வைப்பதற்காக!

சி. காசிராஜன்; சமயநல்லூர்.

(?) ஊமைப் படம் பேச ஆரம்பித்தது எந்த ஆண்டில்?

ஆச்சாரியார் பதவி துறந்த ஆண்டில்— அப்போதுதான் காமராசர் பதவிக்கு வந்து, ஊமை வேஷத்தைக் கலைக்கமுயன்றார்!

வே. கமலக்சண்ணன்; கோவை.

(?) ஒரு சாதாரண வெற்றிலைப் பாக்குக் கடைக்காரனுக்கும், இந்தியப் பிரதமர் நேருவிற்கும் என்ன வித்யாசம்?

வெற்றிலைப் பாக்குக் கடைக்காரன் ஒருநாள் கடையை விட்டு வெளியூர் சென்று வருவதற்கே யோசனை செய்கிறான்; ஆனால் பண்டிதரோ ஒரு நாட்டு நிர்வாகத்தையே மறந்து—முப்பத்தி மூன்று நாட்கள், வெளி நாடுகளில் சுற்றுப் பயணம் நடத்துவதற்கான, திராணியைப் பெற்றிருக்கிறார்; அவ்வளவுதான்!

நீட்டோலை...

❋ 1-ம் பக்கத் தொடர்ச்சி

அல்ல! தேடிச் சென்று பெறவும்—பெறுவதற்குக் கஷ்டம் ஏற்கவுமான பெருமை மிக்க பொருள்களுமல்ல அவைகள்! பராரிகள்—பஞ்சைகள்—பரட்டைத் தலையர்கள்—ஒட்டிய வயிறுடையார்—உலர்ந்த உதடுடையார்—இவர்களே ஒரு நாட்டில் "பிரளய"த்தை உண்டுபண்ணிடும் வலிமை பெற்றவர்கள். அந்தப் பிரளயத்தையும் அமைதி வழியில் தோற்றுவிக்கும் நாகரீக காலத்திலே வாழ்கிறோம். அதற்கென நல்ல தலைவனைப் பெற்றிருக்கிறோம். அந்தத் தலைவனின் கீழ் நின்று ஆதிபத்ய வேட்டைக்காரர்களைத் துரத்திடப் பல வழி துறைகள் வகுக்கின்றோம். அதிலே ஒன்றுதான் சட்டசபை நுழைவு எனவும் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். ஒரு நாட்டில் சுதந்திர இயக்கம் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலைகளை அறிவிக்கும் விடிவெள்ளிகளாக எந்தெந்தச் சம்பவங்கள் இருந்தனவோ—அந்தச் சம்பவங்கள் நமது தென்னகத்திலும் ஒன்றன்பின் ஒன்றாக உதயமாகிக் கொண்டிருக்கின்றன. பாட்டாளிகள் நம் பக்கம் குவிகின்றனர். பல்கலைக் கழகங்களில் பாசறை அமைகிறது. கலையுலகம் நமது களமாகக் காட்சி தருகிறது. அலுவலகங்களில் நம்மைப்பற்றிப்பேசாதார் இல்லை. நம்மிடம் அனுதாபங் காட்டாதவர்கள் அங்கெல்லாம் மிகக் குறைவு.

"அய்யோ இவர்களையா அடக்கு முறைக்கு ஆளாக்குவது?"—போலீசாரும் அந்தத் தமிழ் நெஞ்சம் பெறுகின்றனர். இன உணர்ச்சி அவர்கள் இரத்தத்தில் சுழன்றோடக் காண்கிறோம். வாணிபத்தெருக்களில் வடக்கு தெற்கு பற்றிப் பேசப்படுகிறது. மந்திரிகளிலேயே ஒரு சிலர் "கருவாடு பறிகொடுத்த பார்ப்பன மாது"வின் நிலையில் மௌனம் சாதித்து மங்கிப் போகின்றனர். இப்படி அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளிவிட்டுக் கிளம்புகிறது விடுதலை எழுச்சி! "சுதந்திர சூரியன் உதிக்கின்ற நேரம்—தூங்காதே தோழா!" என இசைவாணர்கள் முழக்குகின்றனர். அவர்கள் இதயத்திலும் விடுதலைக் கனல் மண்டிக் கிடப்பதை அறிய முடிகிறது. சின்னஞ் சிறிய எகிப்து, தன்னந் தனியாக வாழ்ந்ததால் தான் தனக்குரிய உரிமையைப் பெற, தரணியிலே ஒரு பெரும் பகுதியினரைத் தன்பக்கம் பேச வைத்திட முடிகிறது. ஆதிபத்ய வெறியர்களை முறைத்துப் பார்த்திட முடிகிறது—என்கிற உண்மை, திராவிடம் தனி அரசு பெற்றிட வேண்டாமெனும் பித்தர்கட்கும் பெரும் உபதேசமாக ஒலித்திடுகிறது!

இந்த நிகழ்ச்சிகள் இருள் நீங்கப் போகிறது, வெற்றி நம்மைத் தழுவப் போகிறது, என்பதை உணர்த்தும் முன் அறிவிப்புக்கள்!

"அதோ, தென் திசையில் உதித்து விட்டான் விடுதலைச் செங்கதிரோன்!" என்று அகிலம் ஆரவாரத்தோடு ஒருநாள் பார்க்கத்தான் போகிறது! திராவிடத்தில்—தென்னகத்தில்—தென் திசையில்—உதிக்க இருக்கும் அந்தச் சூரியனைக் குறித்துத்தான் நமது அண்ணா அவர்கள் "ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!" என்ற சிலப்பதிகார வரிகளை நினைவூட்டி, அந்த "உதய சூரியன்" வென்றிடத் தோழர்கள், பணிபுரிய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

தேர்தலில் ஒரு அரசியல் இயக்கம் ஈடுபடுவது ஜனநாயகக் கடமை!

அதைப் பொறுக்காது, "அடிப்பியோ நொப்பன் மவனே!" என்று அலறுவது மடமை! அழித்துவிடுவோம் என மிரட்டுவது சர்வாதிகாரிகளுக்கே உரிய தனி உடமை!

எழுதிக் கொண்டே போகிறேன்; அதோ 'உதய சூரியன்' வேறு பல கணி வழியே எட்டிப்பார்க்கிறான்; என்னை எழுப்பி விடுவதற்கு!...நான்தான் அவனுக்கு முன்பே எழுந்து விட்டேனே......பிற அடுத்த மடலில்!

உன் அன்புத்தோழன்.

விற்பனையாளர்களுக்கு!

முத்தாரம்

❋ செப்டம்பர் மாத 'முத்தாரம்' இதழ் அதிகப் பிரதிகள் தேவையுள்ள விற்பனையாளர்கள், வருகிற 15-ம் தேதிக்குள் வேண்டிய முன் பணத்துடன் தெரிவிக்க வேண்டும். அந்தத் தேதிக்கு மேல் வருகிற 'ஆர்டர்கள்' கவனிக்கப்படமாட்டாது.

❋ தொகை அனுப்புவோர், கடிதம் எழுதுவோர்—நிர்வாகி, முத்தாரம், என்று தெளிவாக முகவரி எழுதவும்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.